முஹர்ரம் மாதமும் ஹுஸைன் (ரலி) அவர்களின் உயர் தகுதியும் பக்கம் 3

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு (தொடர்-8) பக்கம் 8

உலக சமுதாயங்களால் வாக்களிக்கப்பட்டவர் பக்கம் 11

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆட்சி – இன்றைய தலைமைத்துவத்திற்கு ஒரு வழிவிளக்கு பக்கம் 16



மாத இதழ்


# நுபுவ்வத் வழி


www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | August 2022 | Issue No. 9



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340





**U.K. ஜல்ஸா ஸாலானாவில்**

**ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கொடியேற்றும் காட்சி**



# திருக்குர்ஆன்

لِّتُؤْمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ وَتُعَزِّرُوْهُ
وَتُوَقِّرُوْهُ ؕ وَ تُسَبِّحُوْهُ بُكْرَةً
وَّ اَصِيْلًا

நீங்கள் அல்லாஹ்விடத்தும், அவனது தூதரிடத்தும், நம்பிக்கை கொண்டு, அவருக்கு உதவி செய்து, அவரைக் கண்ணியப்படுத்திக் காலையிலும் மாலையிலும் அவனது தூய்மையினை எடுத்துரைப்பதற்கே (நாம் அவரை அனுப்பினோம்). (திருக்குர்ஆன் 48:10)



# ஹதீஸ்

عَنْ أَبِى هُرَيْرَةَ، أَنَّ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ سُئِلَ أَىُّ الأَعْمَالِ أَفْضَلُ قَالَ "الإِيمَانُ بِاللهِ وَرَسُوْلِهِ"

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் 'எது சிறந்த செயல்?' என்று வினவப்பட்டது. அதற்கு அவர்கள், அல்லாஹ்வின் மீதும் அவனது தூதரின் மீதும் நம்பிக்கை கொள்வதாகும் என்று கூறினார்கள்."

(சுனன் அந்நஸாயி, கிதாப் அல் ஈமான் வஷராயிஹி, ஹதீஸ் எண்.4985)

# ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 10.12.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

## முஹர்ரம் மாதமும் ஹுஸைன் (ரலி) அவர்களின் உயர் தகுதியும்

தஷஹ்ஹுது தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு
ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அவர்கள் தங்களை யஸீதாக ஆக்கிக் கொண்டு உங்களை ஹுஸைனாக ஆக்குகின்றார்கள். எதிரிகளை அம்பு எய்தும்படி விட்டு விடுங்கள். இது எவ்வளவு நல்ல வணிகமாகும்.



இந்தக் கவிதை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களால் 1935 -ல் ஜமாஅத்திற்கு எதிராக எழுந்த எதிர்ப்பின் போது இயற்றப்பட்டதாகும். இதில் ஜமாஅத்திற்குப் பொறுமை, தைரியம் மற்றும் உறுதிப்பாட்டிற்கான அறிவுரை செய்யப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், நான் தற்போது அந்தக் கவிதையின் அடிப்படையில் சில விஷயங்களைக் கூறுவேன். இக்கவிதையின் மூலமாக ஒவ்வொரு முஸ்லிமுக்கும் இஸ்லாமிய வரலாற்றின் ஒரு வேதனைமிக்க மற்றும் அநீதியின் உச்சகட்ட சம்பவம் நினைவுக்கு வரும். ஆனால் எவர் அநீதி என்னும் ஆட்டுரலில் அரைக்கப்படுகின்றாரோ அவர்தான் இந்த வேதனை மற்றும் துயரம் மிகுந்த சம்பவத்தின் ஞானத்தைப் பெற முடியும். இந்த சம்பவத்தைக் கேட்டு நிச்சயமாக ஒவ்வொரு முஸ்லிமும் அனுதாபத்தையும், துன்பத்தையும், துயரத்தையும் வெளிப்படுத்துகின்றனர். மேலும் ஷியா சகோதரர்கள் ஒவ்வொரு ஆண்டும் தமது வழிமுறைக்கேற்ப முஹர்ரம் மாதத்தில் இதனை வெளிப்படுத்த முயற்சி செய்கின்றனர். நம்மைப் பொருத்தவரை அதில் அவர்கள் எல்லை மீறி விடுகின்றனர். எப்படியிருப்பினும், அது அவர்களின் நடைமுறையாகும். ஆனால் நான் கூறியது போன்று அநீதிக்குள்ளானவர் தான் இந்த அநீதியின் உண்மைத்துவத்தை உணர முடியும். இன்று இக்காலத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தைத் தவிர வேறு எவரால் கர்பலா சம்பவத்தை சிந்தித்து கண்டுணர முடியும்? எனவேதான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், அவர்கள் தங்களை ஹுஸைனாக ஆக்குகின்றார்கள் என்று கூறினார்கள். இந்த இரண்டு தரப்பினரும் யாராக இருந்தார்கள்? இரண்டு தரப்பினரும் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற கலிமாவை கூறக் கூடியவர்களாக இருந்தனர். ஆனால் இருவரில் ஒருவர் கலிமாவின் உண்மைத் துவத்தைப் புரிந்து அநீதியிழைக்கப்பட்டவரானார். மற்றொருவரோ கலிமாவை மதிக்காமல் அநீதி இழைக்கக் கூடியவரானார். ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள், அன்னாரின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சில நண்பர்கள் கொடூரமான முறையில் ஷஹீதாக்கப்பட்ட கர்பலா சம்பவம் உண்மையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத் (உயிர்த் தியாகம்) சம்பவத்தின் ஒரு தொடர்ச்சி ஆகும். இறையச்சத்தில் குறைவு ஏற்படத் தொடங்கும்போது, சுயநலம், பொதுநலத்தை விட மேலோங்கி விடும் போது, மார்க்கத்தை விட உலகம் முதன்மையாகி விடும் போது அநீதி மற்றும் கொடுமையின் உச்சத்தை மனிதன் தொட்டு விடுவான். அல்லாஹ்வின் பெயரால் அல்லாஹ்வின் அடியார்களின் இரத்தம் சிந்தப்படும். கலிமா கூறக்கூடியவர்களை அநீதி மற்றும் துன்பத்திற்கு உள்ளாக்குவது எவ்வளவு பெரிய துர்பாக்கியமாகும்? எந்த அளவுக்கு என்றால், கலிமா கூறக்கூடிய ஒருவரே, மற்றொருவரை கொடுமைக்கு உள்ளாக்குகின்றார். அப்பாவிகள் மற்றும் குழந்தைகளைக் கொலை செய்யக்கூட தயங்குவதில்லை. இறைவன் மற்றும் இறைதூதரின் பெயரால் இறைவன் மற்றும் தூதருக்காக உயிரையும் பொருளையும் கண்ணியத்தையும் தியாகம் செய்யக்கூடியவர்களைத் துன்பத்திற்கும்

தொல்லைகளுக்கும் ஆளாக்குகின்றனர். இறைவன் மற்றும் தூதரின் பெயரால் அநீதிகள் இழைத்துவரும் இம்மக்களின் துரதிஷ்டம் இதைவிட வேறு என்னவாக இருக்க முடியும்? திருக்குர்ஆன் இதுபோன்றவர்களின் தீய நிலையை எடுத்துரைத்தவாறு கூறுகின்றது.

மேலும் யாரேனும் ஒருவன் நம்பிக்கை கொண்ட ஒருவரை வேண்டுமென்றே கொலை செய்து விட்டால், அவனுக்குரிய தண்டனை நரகமேயாகும். அதில் அவன் நெடுங்காலம் தங்கி விடுவான். அல்லாஹ் அவனிடத்து கோபங்கொண்டு அவனை சபித்து விடுவான். மேலும் அவனுக்கு மாபெரும் ஆக்கினையையும் ஏற்பாடு செய்துள்ளான். (4:94)


அல்லாஹ் இதுபோன்றவர்களுக்கு வெறுப்பு எனும் உச்சகட்ட சொல்லை பயன்படுத்தியுள்ளான். அவரை நரகத்தில் போடுவதோடு மட்டுமல்ல; மாறாக, ஒரு நீண்ட காலம் நரகம் அவரது இருப்பிடமாக இருக்கும். அடுத்து அல்லாஹ்வின் கோபம் அவர் மீது இறங்கிக் கொண்டிருக்கும். அவர் அல்லாஹ்வின் சாபத்தின் அடையாளமாகிக் கொண்டே செல்வார். அல்லாஹ்வின் இந்த சாபம் என்பது சாதாரண விஷயமல்ல. மாறாக அது மிகப்பெரிய தண்டனையாகும். கலிமா கூறக்கூடியவராக இருந்து கொண்டு நெருப்பில் வீழ்ந்து தொடர்ந்து அல்லாஹ்வின் கோபம் மற்றும் சாபத்தின் பெரிய தண்டனையால் ஒரு நபர் சூழப்படுவதை விட பெரிய துர்பாக்கியம் வேறு என்னவாக இருக்க முடியும்? எனவே எவர் தமது சுயநலம் மற்றும் உலக இச்சைகளுக்காக இதுபோன்ற செயல்களை செய்கின்றாரோ அவர் அல்லாஹ்வின் வெறுப்பின் உச்சத்திற்கு ஆளாகின்றார். மேலும் அநீதியிழைக்கப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டதன் காரணமாக, அதாவது அவர்கள் தங்கள் இறைவனிடத்தில் உயிருள்ளவர்கள். அவர்கள் உணவளிக்கப் படுகின்றனர். (3:170) என்ற கண்ணியத்தைப் பெறுகின்றனர்.

அல்லாஹ் இவ்வாறு அவர்களுடன் நடந்து கொள்கின்றான். ஆக, எவர் அல்லாஹ்வின் பார்வையில் உயிருள்ளவராக உள்ளாரோ, மேலும் எவருக்கு தனது இறைவனிடமிருந்து நற்கூலி வழங்கப்படுகின்றதோ அவருக்கு இதைவிட வேறு என்ன வெகுமதி கிடைக்க முடியும்? ஹஸ்ரத் இமாம் ஹஸன் மற்றும் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர்கள் சொர்க்கத்தில், இளைஞர்களின் தலைவர் –களாயிருப்பர். மேலும் இவ்விருவருக்காகவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் இவ்வாறு துஆவும் செய்தார்கள்:

அல்லாஹ்வே! நான் இவர்களை நேசிக்கிறேன். நீயும் இவர்களை நேசிப்பாயாக! ஆமீன்.

எனவே, எவர் இந்த அளவுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் துஆவிலிருந்து பலன்பெறக்கூடியவராக இருப்பாரோ மேலும் ஷஹாதத் (உயிர்த் தியாகி) என்ற அந்தஸ்தையும் பெற்றிருப்பாரோ அவர் நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப சொர்க்கத்தின் உயர்தரமான நற்கூலிக்கு வாரிசாகி விடுகின்றார். மேலும் அன்னாரின் கொலையாளி நிச்சயமாக அல்லாஹ்வின் கோபத்திற்குள்ளாகி விடுவான்.

முஹர்ரம் என்ற மாதத்தின் முதல் பத்து நாட்களை நாம் கழித்துக் கொண்டிருக்கிறோம். இன்றிலிருந்து 1400 வருடங்களுக்கு முன்பு இந்த மாதத்தின் 10-ம் தேதி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அந்த நேசரை அநீதியாளர்கள் ஷஹீதாக்கினர். அந்த சம்பவத்தைக் கேள்விப்பட்டு மெய்சிலிர்த்து விடுகின்றது. நாம் எவருக்கு எதிராக வாளேந்துகின்றோம் என்ற சிந்தனை அந்த அநீதியாளர்களுக்கு எழவில்லை? நான் கூறியது போன்று ஈமான்



காணாமல் போய் விடும்போது எல்லா உணர்வுகளும் அழிந்து விடுகின்றன. இன்னும் கூறுவதாயின் அல்லாஹ்வின் மீதான அச்சமும் இல்லாமல் போய் விடுகின்றது. அல்லாஹ்வின் மீது அச்சமே இல்லாமல் ஆகி விடும் போது அல்லாஹ்வின் பார்வையில் அல்லது அவனது தூதர் (ஸல்) அவர்களிடத்தில் யாருக்கு என்ன மதிப்புள்ளது? என்பதெல்லாம் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் ஷஹாதத் எவ்வாறு நடைபெற்றது. அன்னாரின் அருளுக்குரிய சடலத்தோடு எவ்வாறு நடந்து கொள்ளப்பட்டது என்ற சம்பவத்தை ஒருவர் கேள்விப்படும் பொழுது, வெளிப்படையாக வேண்டுமானால் கலிமா கூறியவர்களாக இருந்திருக்கலாம். ஆனால் உண்மையில் அந்த அநீதியாளர்களுக்கு அல்லாஹ்வின் மீது நம்பிக்கை இல்லை என்ற நம்பிக்கையில் உறுதிபெற்று விடுவார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மனித நேயத்தை நிலைநிறுத்த தோன்றினார்கள். அன்னார் போர் செய்வதற்கு சில விதிமுறைகளைக் கற்றுத் தந்தார்கள். அல்லாஹ் திருக்குர்ஆனில் எதிரிகளோடு நீதியோடும், நடுநிலையோடும் நடந்து கொள்ளும்படி நமக்கு அறிவுரை செய்துள்ளான். இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அழிக்க நினைத்த எதிரிகளிடம் கூட போரின்போது கொல்லப்பட்டவர்களின் உடல்களை அரபு நாட்டு வழிமுறையின்படி அவமதிப்பதை அல்லாஹ் தடை செய்தான். மனிதநேயம் பாழ்படுத்தப்படுகின்ற எல்லா வழிமுறைகளையும் தீயபழக்கங் –களையும் ஒழிக்கவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தோன்றினார்கள். அன்னார் காஃபிர்களிடம் கூட மென்மையும் கருணையும் காட்டினார்கள். ஆனால் அல்லாஹ்வே! நான் இவர் மீது நேசம் கொள்கிறேன். நீயும் இவரை நேசிப்பாயாக என்று அல்லாஹ்வின் அன்பிற்குரிய பேரனுக்காக ஹஸ்ரத் நபி (ஸல்)



அவர்கள் துஆ செய்தார்களோ, அவர்களை எதிரிகள் கருத்தில் கொள்ளவில்லை. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எவர் என்னுடைய இந்தப் பேரன்களை நேசிப்பாரோ அவர் என்னை நேசிக்கின்றார். மேலும் எவர் என்னை நேசிக்கின்றாரோ அவர் அல்லாஹ்வை நேசிக்கின்றார். அல்லாஹ்வின் மீதான அன்பின் காரணத்தால் அவர் சொர்க்கத்தில் நுழைவார். மேலும் இதேபோன்று அவரை வெறுப்பதன் மூலமாக அல்லாஹ்வின் வெறுப்பை அவர் சம்பாதித்துக் கொள்வார். எவருக்கு ஒருவரிடத்தில் உண்மையான அன்பு இருக்குமோ அவருடைய அன்பிற்குரியவர் மீதும் அவர் அன்பு செலுத்துவார். ஒரு பக்கம் அன்பிற்கான வாதமும் மறுபக்கம் அன்பிற்குரியவரின் அன்பர்களிடத்திலும், பிள்ளைகளிடத்திலும் வெறுப்பு என்பது ஒன்றுசேர முடியாது. அல்லது ஒருவர் மீது அன்பு செலுத்துவதாக வாதம் செய்து அவருடைய அன்பர்களிடத்தில் அவர் உயிரோடிருக்கும் வரை அன்பு செலுத்தி விட்டு அவர் கண்மூடிய உடனேயே அன்பிற்குரியவரின் அன்பர்களின் மீதான வாதம் வெறும் வாதமாக இருந்தால், அது உலகவாதிகளின் அன்பாகும். இது அல்லாஹ்வுடன் தொடர்புடையவர்களின் அன்பரின் நடைமுறையாக இருக்க முடியாது.

ஒருமுறை ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் தமது கிலாஃபத்தின் காலகட்டத்தில், ஓர் இடத்திற்குச் சென்று கொண்டிருந்தார்கள். வழியில் அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அன்பிற்குரிய பேரர், மற்ற பிள்ளைகளோடு விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு தோளில் தூக்கிக் கொண்டார்கள். பின்னர் அன்பு செலுத்தியவாறு கூறினார்கள். எனது அன்பிற்குரிய எஜமானர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இவர் மிகவும் அன்பிற்குரியவராவார். எனவே நான் இவர் மீது அன்பு செலுத்துகிறேன். ஆக இதுதான் விசுவாசம் மற்றும் அன்பின் வழிமுறையாகும். ஆனால் கர்பலா சம்பவத்தின்போது அன்னாருடன் (ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களுடன்) எவ்வாறு நடந்து கொள்ளப்பட்டது? எந்த போதனையை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்தார்களோ அது எந்த அளவுக்கு புறக்கணிக்கப்பட்டது?

அறிவிப்பில் வருகின்றது. அன்னாரின் படையினை எதிரிகள் சுற்றி வளைத்த போது ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் தமது குதிரையை நதியை நோக்கி திருப்பினார்கள். நதிக்கும் அவருக்கும் இடையில் தடையை ஏற்படுத்துங்கள் என ஒருவன் கூறினான். எனவே அன்னாரின் வழிப்பாதையை மக்கள் மறித்தனர். அன்னாரை நதி வரை செல்லவிடவில்லை. அந்த நபர் ஓர் அம்பை எய்தான். அது அன்னாரின் கழுத்தின் கீழ்ப்பகுதியை துளைத்தது.

அறிவிப்பாளர் அந்தப் போரின் நிலையைப் பற்றி கூறுகின்றார். அன்னார் தலைப்பாகை அணிந்திருந்தார்கள். மேலும் எவ்வாறு கோபமுற்ற ஒரு குதிரை வீரர் அம்புகளிலிருந்து தப்பித்தவாறு தாக்குதல் செய்வாரோ அதுபோன்று அன்னார் நடந்தவாறு போர் செய்தார்கள்.

நான், ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்கள், ஷஹீது ஆவதற்கு சற்று முன்னர் இவ்வாறு கூறுவதைக் கேட்டேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! என்னுடைய கொலையை விட அல்லாஹ் அதிகமாக கோபப்படும் அளவிற்கு நீங்கள் எனக்குப் பிறகு வேறெந்த இறையடியாரையும் கொலை செய்யமாட்டீர்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! உன்னை இழிவுபடுத்தி, எனக்கு அல்லாஹ் கண்ணியம் வழங்குவான் என எனக்கு நம்பிக்கை உள்ளது. மேலும் நீ ஆச்சரியப்படும் அளவில் உன்னை அல்லாஹ் பழிவாங்குவான்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீ என்னை கொலை செய்து விட்டால் அல்லாஹ் உன்னோடு போரிடுவான். உன்னுடைய இரத்தம் சிந்தப்படும். அல்லாஹ் அதன் மீதும் திருப்தி அடையமாட்டான். எதுவரையென்றால் அல்லாஹ் பெரும் தண்டனையைப் பல மடங்கு உனக்கு அதிகரித்து விடுவான்.

அன்னாரை ஷஹீதாக்கிய பிறகு கூஃபாவாசிகள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்றால் கூடாரங்களை சூறையாடத் தொடங்கினர். எந்த அளவுக்கு என்றால் பெண்களின் தலையிலிருந்த துப்பட்டாவை கூட பிடுங்கிக் கொண்டனர். அமர் பின் ஸாத் என்பவன் யாரெல்லாம் தனது குதிரையின் மூலமாக ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களை இழிவுபடுத்துவார் எனக் கேட்டான்.

இதைச் செவியுற்று 10 குதிரை வீரர்கள் வந்தனர். அவர்கள் தமது குதிரைகளால் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் உடலை சிதைத்தனர். எந்த அளவுக்கு என்றால் அன்னாரின் நெஞ்சையும் முதுகையும் துண்டு துண்டாக்கி விட்டனர்.

இந்தப் போரில் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் உடலில் 45 காயங்கள் அம்பினாலும், 33 காயங்கள் வாளினாலும் ஏற்பட்டிருந்தன. அடுத்து அநீதியின் உச்சகட்டமாக ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களின் தலை அடுத்த நாள் உடம்பிலிருந்து துண்டிக்கப்பட்டு கூஃபா கவர்னர் உபைதுல்லாஹ் பின் ஸியாதுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த கவர்னர் ஹஸ்ரத்

இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் தலையை கூஃபாவில் தரையில் நாட்டினான்.

அதன் பிறகு ஸஹர் பின் கேய்ஸ் மூலமாக யஸீதிடம் தலை அனுப்பி வைக்கப்பட்டது. ஆக, அன்னார் ஷஹீதாக்கப்பட்ட பிறகு அன்னாரின் சடலத்தோடு எதிரிகள் இவ்வாறு நடந்து கொண்டார்கள். இதைவிட கொடூரமான செயல் வேறு என்னவாக இருக்க முடியும்? அன்னாரின் உடல் சிதைக்கப்பட்டது. தலை உடம்பிலிருந்து துண்டிக்கப்பட்டது. இதுபோன்று சடலத்தை அவமதிக்கின்ற செயலை ஒரு கொடிய எதிரி தனது மற்ற எதிரியிடம் செய்வானேயொழிய கலிமா கூறக்கூடிய மற்றும் மனித நேயத்தைப் பேணுவதற்கு மிக கண்டிப்புடன் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு எந்த நபி போதித்தாரோ அந்த நபியைச் சார்ந்திருப்பவரால் இவ்வாறு செய்ய முடியாது.

எனவே நிச்சயமாக இந்த செயலை செய்தவர்களின் உள்ளத்தின் நிலை இச்செயலிலிருந்து வெளிப்படுகின்றது. அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் உலகவாதிகள் ஆவர். மேலும் தங்களது நோக்கத்தை அடைவதற்காக எல்லா எல்லை–களையும் மீறக்கூடியவர்கள் ஆவர். எனவே (எல்லையை) மீறினார்கள். மார்க்கத்தோடு அவர்களுக்கு கடுகளவும் தொடர்பிருக்கவில்லை. இவர்களுடைய உலக இச்சைகளை உணர்ந்துதான் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் யஸீதிடம் பைஅத் செய்வதிலிருந்து நிராகரித்து விட்டார்கள்.



ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் தீயவனின் கைகளில் பைஅத் செய்வதை விரும்ப–வில்லை. ஏனென்றால் அதனால் மார்க்கத்திற்குக் கேடு ஏற்படும்.

அடுத்து கூறினார்கள்: கெட்ட யஸீதிடம் பைஅத் செய்வதில் பெரும்பாலார் ஒன்றுபட்டனர். ஆனால் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் மற்றும் அன்னாருடைய ஜமாஅத் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளாமல் நிராகரித்து விட்டனர். ஆனால் பைஅத் செய்யாதிருந்த போதிலும் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் சமாதானத்திற்கு முயற்சி செய்தார்கள். முஸ்லிம்கள் கொலை செய்யப்படலாம் என்பதை உணர்ந்து அன்னார் தம்முடன் இருந்தவர்களை திருப்பி அனுப்பி வைத்து விட்டார்கள். இப்போது நிலைமை மோசமாக உள்ளது. எவர்கள் அன்னாருடன் இருக்க வேண்டும் என அடம்பிடித்தார்களோ அவர்களைத் தவிர மற்றவர்களை, இப்போது நீங்கள் சென்று விடலாம் எனக் கூறி அனுப்பி வைத்து விட்டார்கள். அவர்களின் எண்ணிக்கை சுமார் 30, 40 இருக்கும். அல்லது அவர்கள் அன்னாரின் குடும்ப உறுப்பினர்களாயிருப்பர்.

அன்னார் (ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி)) யஸீதின் பிரதிநிதிகளிடம் நாங்கள் போரை விரும்பவில்லை என்றும் கூறினார்கள். என்னைத் திரும்பிச் செல்ல அனுமதியுங்கள். நான் சென்று அல்லாஹ்வை வணங்குவேன் என்று அன்னார் கூறினார்கள். அல்லது இஸ்லாத்திற்காகப் போரிட்டு நான் ஷஹீதாகும் விதமாக என்னை ஏதாவது நாட்டின் எல்லையின் பக்கம் செல்ல அனுமதியுங்கள். அல்லது இதே நிலையில் என்னை யஸீதிடம் கொண்டு செல்லுங்கள். நான் அவருக்கு உண்மையைப் புரிய வைக்கின்றேன் என்றெல்லாம் கூறினார்கள். ஆனால் அந்தப் பிரதிநிதிகள் எதனையும் ஏற்றுக் கொள்ளவில்லை. போர் அன்னார் மீது திணிக்கப்பட்ட பிறகு தைரியமிக்க போர் வீரராக அவர்களை எதிர்கொள்வதைத் தவிர்த்து அன்னாருக்கு வேறு வழியில்லாமல் போனது. எப்படியிருப்பினும் நான் கூறியது போன்று அன்னாருடன் மிகக் குறைவான நபர்களே இருந்தனர். மொத்தம் 70, 72 நபர்களே இருந்தனர். ஆனால் அவர்களுக்கு எதிரில் ஒரு மாபெரும் படையிருந்தது. அதனை அவர்களால் எவ்வாறு எதிர்கொள்ள முடியும்? எப்படியிருப்பினும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று ஒரு நல்ல நோக்கத்திற்காக அன்னார் தமது உயிரைத் தியாகம் செய்தார்கள். பழிவாங்குவதற்கு அல்லாஹ்வுக்கும் சில வழிமுறைகள் உள்ளன. ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் அல்லாஹ் பழிவாங்குவான் என கூறியிருந்தார்கள். அதேபோன்று அல்லாஹ் பழிவாங்கினான். யஸீதிற்குத் தற்காலிக வெற்றிதான் கிடைத்தது. ஆனால் இன்று எவராவது யஸீதை அவனது நல்ல பணிக்காக நினைவு கூறுகின்றாரா? நற்பெயரின் காரணமாக அவன் நினைவு கூறப்பட்டிருந்தால் முஸ்லிம்கள் அவனது பெயரையே தமது பெயராக வைத்திருப்பார்கள். ஆனால் இன்று எவரும் தமது பிள்ளைக்கு யஸீத் என்று பெயர் வைப்பதில்லை. அவன் இன்று நினைவு கூறப்படுகின்றான் என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதுபோன்று கெட்ட யஸீத் என்றுதான் நினைவு கூறப்படுகிறான்.

ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களுக்கு ஒரு நோக்கமிருந்தது. அவர் அரசாட்சியை விரும்பவில்லை. அன்னார் உண்மையை நிலைநாட்ட விரும்பினார்கள். அதனை அன்னார் செய்தும் காட்டினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதனைத் தெளிவாக விளக்கியுள்ளார்கள். கிலாஃபத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை நாட்டு மக்களுக்கு உரியது. ஜமாஅத்திற்கு உரியது. எந்த மகனும் தனது தந்தையின் வாரிசாக அதற்கு

உரிமைகொண்டாட முடியாது. இந்த விதிமுறையினை இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் நிலைநாட்டினார்கள். இந்த விதிமுறை எவ்வாறு முன்னர் புனிதமாக இருந்ததோ இன்றும் அது புனிதமாகவே உள்ளது. எனவே ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் ஷஹாதத் இவ்வுரிமையை மேலும் தெளிவுபடுத்தி விட்டது. எனவே வெற்றி பெற்றது ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களேயொழிய, யஸீது அல்ல. அடுத்து இயற்கையின் பழிவாங்குதலின் மற்றொரு கொடூர வழிமுறையைப் பாருங்கள்.

இது தொடர்பாகவும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தைத் தமது புத்தகமான கிலாஃபத்தே ராஷிதாவில் குறிப்பிடுகின்றார்கள். வரலாற்றில் வருகின்றது. யஸீத் மரணித்த பிறகு அவரது மகன் பதவி ஏற்றார். அவரது பெயரும் அவரது தாத்தாவின் பெயரைப் போன்று முஆவியாவாக இருந்தது. அவர் மக்களிடம் பைஅத் வாங்கிய பிறகு தமது வீட்டிற்குச் சென்று விட்டார். 40 நாட்கள் வரை வெளியே வரவில்லை. பின்னர் ஒருநாள் வீட்டை விட்டு வெளியேறி மேடையில் ஏறி மக்களிடம் கூறினார். உங்களிடம் பைஅத் வாங்குவதற்கு என்னைத் தகுதியானவன் எனக் கருதி நான் உங்களிடம் பைஅத் வாங்கவில்லை. மாறாக உங்களிடம் பிரிவினை வந்து விடக்கூடாது என விரும்பிதான் பைஅத் வாங்கினேன். மேலும் உங்களில் எவராவது பைஅத் வாங்கும் தகுதியுடையவர் உள்ளாரா? அவ்வாறிருந்தால் அவரிடம் இப்பதவியை ஒப்படைத்து விட்டு நான் விலகிவிடலாமே என்று தான் அன்றிலிருந்து இதுவரை சிந்தித்துக் கொண்டிருந்தேன். சிந்தித்த பின்னரும் உங்களில் அதற்குத் தகுதியுடைய எவரும் எனக்குத் தென்படவில்லை. எனவே மக்களே! நன்றாக கேட்டுக் கொள்ளுங்கள். நான் இப்பதவிக்குத் தகுதியானவன் இல்லை. என்னுடைய தந்தையும், பாட்டனாரும் கூட இப்பதவிற்குத் தகுதியானவர் இல்லை. எனது தந்தை அந்தஸ்தில் ஹஸ்ரத் ஹுஸைனை விட மிகவும் குறைவானவராக இருந்தார். மேலும் அவருடைய தந்தை ஹஸன், ஹுஸைனின் தந்தையை விடக் குறைந்த அந்தஸ்தைக் கொண்டவராகவே இருந்தார். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கிலாஃபத்திற்குத் தகுதி படைத்தவராக இருந்தார்கள். அவருக்குப் பிறகு எனது பாட்டனார் மற்றும் எனது தந்தையை விட ஹஸ்ரத் ஹஸன், ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) கிலாஃபத்திற்கு அதிக உரிமையுடையவராக இருந்தனர். எனவே நான் இந்தப் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்கிறேன்.

அவர் இவ்விஷயங்களைக் கூறி எவ்வாறு தந்தை முகத்தில் கரியைப் பூசினார் என்று இப்பொழுது பாருங்கள்! ஏனென்றால் அவரிடத்தில் இறையச்சமிருந்தது. தக்வாவில் சில அம்சங்கள் அவரிடத்தில் இருந்தன. உலகவாதிகளுக்கும் நல்ல உண்மையை விரும்பக்கூடிய நீதியுடன் செயல்படக்கூடிய பிள்ளைகள் பிறக்கின்றன. எவ்வாறிருப்பினும், இனி யாரிடம் நீங்கள் பைஅத் செய்ய விரும்புகிறீர்களோ, பைஅத் செய்து கொள்ளுங்கள் என்று அவர் கூறினார்.

அவருடைய தாய் திரைக்குப் பின்னால் இருந்து அவரது சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் அவரின் சொற்பொழிவுவைக் கேட்டு மதி கெட்டவனே! நீ உனது குடும்பத்தின் கண்ணியத்தைக் கெடுத்து விட்டாய் என மிகக் கோபத்துடன் கூறினாள். அதற்கு அவர் (யஸீதின் மகன்) நான் கூறியது உண்மையாகும். இனி உங்கள் விருப்பம். நீங்கள் என்னைப் பற்றி என்ன வேண்டுமானாலும் கூறிக் கொள்ளுங்கள் என்று கூறினார். இதன் பிறகு அவர் தனது வீட்டினுள் சென்று விட்டார். வீட்டை விட்டு வெளியே வரவில்லை. வீட்டிலேயே அமர்ந்திருந்தார். சில நாட்களிலேயே மரணித்து விட்டார்.




ஆக, யஸீதின் கிலாஃபத்தை மற்றவர்கள் விரும்பியது ஒருபக்கம் இருக்கட்டும். அவனது மகனே அதனை விரும்பவில்லை என்பதற்கு இது எவ்வளவு பெரிய சாட்சியாகும்? ஏதோ ஒரு பேராசையின் காரணமாக மகன் ஒன்றும் இவ்வாறு செய்யவில்லை. அல்லது எதிர்ப்பிற்கு பயந்தும் அவ்வாறு செய்யவில்லை. மாறாக, அவர் அமைதியாக சிந்தித்த பிறகுதான் தன்னுடைய தந்தையை விட ஹஸ்ரத் ஹுஸைன் அதிக தகுதியுடையவர் மற்றும் தன்னுடைய பாட்டனாரை விட ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அதிக தகுதியுடையவர் என தனது உள்ளத்தால் இந்த முடிவிற்கு வந்தார். மேலும் நான் இந்த சுமையை சுமக்கத் தயாரில்லை என முடிவு செய்தார்.

முஆவியா, யஸீதை நியமனம் செய்தது தேர்தல் மூலமாக என்று கூற முடியாது. மகனே தனது தந்தையின் உண்மையை வெளிப்படுத்தி அவரைக் கீழ்த்தரமானவர் என நிரூபிப்பதை விட ஒருவரின் இழிவிற்கு வேறு என்ன போதுமானதாக இருக்க முடியும்? ஆக, ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் ஷஹாதத் (உயிர்த் தியாகம்) நமக்குப் பல பாடங்களைக் கற்றுத் தருகின்றது. அன்னார் தமது உயிரைத் தியாகம் செய்து உண்மையை நிலைநாட்டினார்கள். அல்லாஹ் நம்மை நேர்வழியில் எப்போதும் நடத்தி வர நாம் துஆவின் மூலமாக அல்லாஹ்விடத்தில் உதவி தேடிவர வேண்டும்.

ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹை (அலை) ஹஸ்ரத் இமாம் ஹுஸைனோடு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த உவமையிலிருந்து வரவிருக்கின்ற மஸீஹும் இந்த உவமையில் பங்கு பெறுவார் என்பது வெளிப்படையாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் ஹஸ்ரத் ஹுஸைன் அவர்களின் ஒப்புமை பொருந்துகின்றது. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் இஸ்லாத்திற்குக் களங்கம் ஏற்படுத்திய அந்த சம்பவங்கள் மீண்டும் நடைபெறாது. இது இறைநியதியாகும். எப்படியிருப்பினும், ஈமானின் தடுமாற்றத்திற்குக் காரணமாகின்ற விஷயங்களிலிருந்து தப்பித்திருக்க துஆவின் பக்கம் எப்பொழுதும் நாம் கவனம் செலுத்த வேண்டும். நான் கூறியது போன்று முன்பு நடைபெற்ற சம்பவங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் மீண்டும் அல்லாஹ் நடக்கவிடமாட்டான். ஏனென்றால் கிலாஃபத்தின் தொடர் இங்குள்ளது. மேலும் ஒரு வழிமுறைக்கேற்ப கிலாஃபத் தேர்தலும் உள்ளது. மேலும் மஸீஹ், மஹ்திக்குப் பிறகு அந்த (கிலாஃபத்) தொடர் நிலைபெறும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பும் செய்துள்ளார்கள். (தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

*(தொடரும்...)*



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

8

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

### மக்கள் மத்தியில்

தயானந்த் சரஸ்வதி என்பவர் குஜராத்திலுள்ள பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். அவர் 1824 –ஆம் ஆண்டு கத்தியவாரில் பிறந்தார். 1883 –ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 –ஆம் நாள் அஜ்மீரில் மரணமடைந்தார். மார்க்க ரீதியான அவரது கருத்துக்கள் மக்கள் மத்தியில் ஓரளவு பரவியதும், இந்தியா முழுவதும் சமாஜங்களை நிறுவினார். முதலாவது சமாஜம் 1875 –ஆம் ஆண்டு மும்பையில் ஏற்படுத்தப்பட்டது. மும்பையிலும், உத்திரபிரதேசத்திலும் உள்ள மக்கள் மத்தியில் தம் கருத்துக்களைப் பரப்ப அவர் மிகுந்த முயற்சி எடுத்துக் கொண்ட போதிலும் அவரால் அதில் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு வெற்றி பெற முடியவில்லை. ஆனால் பஞ்சாபில் நிலைமை வேறாக இருந்தது. அங்கு இரண்டு மாத காலத்தில் அவ்வியக்கம் எல்லாத் தரப்பு மக்கள் மத்தியிலும் பரவத் தொடங்கியது. ஏழை, பணக்காரர், படித்தவர், பாமரர், கடவுள் நம்பிக்கையற்றோர், கடவுளின் இருப்பில் உறுதியான நம்பிக்கையற்றோர் போன்ற அனைத்துத் தரப்பு மக்களையும் சமாஜத்தின் கொள்கைகள் ஈர்த்ததாக வரலாற்றாசிரியர் ஒருவர் கூறுகிறார். 1877 –ஆம் ஆண்டு பஞ்சாபிலுள்ள முல்தான், குர்தாஸ்பூர், ராவல்பிண்டி, ஜீலம், வஸீராபாத், குஜராத், குஜரான்வாலா, லாஹூர், அமிர்தசரஸ், ஜலந்தர், லூதியானா, ஃபெரோஸ்பூர் போன்ற பல நகரங்களுக்கு அவர் (தயானந்த சரஸ்வதி) பயணம் மேற்கொண்டார். சென்ற இடங்களிலெல்லாம் அவர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்; விவாதங்கள் நடத்தினார்; அவன் விளைவாக ஆங்காங்கே சமாஜங்கள் நிறுவப்பட்டன. எனவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தம் கவனத்தை ஆர்ய சமாஜத்தின் பக்கம் திருப்பினார்கள்.

காதியானிலிருந்த ஆரிய சமாஜப் பிரிவுக்கு ஷரம்பத் ராய் என்பவர் செயலாளராக இருந்தார். அந்த அமைப்பில் 15 பேர் உறுப்பினர்களாக இருந்தனர். மிர்ஸா குலாம் முர்தஸா அவர்களின் மரணத்திற்குப் பின் குடும்பப் பொறுப்புகள் அனைத்தையும் மிர்ஸா குலாம் காதிர் ஏற்றுக் கொண்டிருந்தார். எனவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது நேரம் முழுவதையும் இறைபணிக்காகச் செலவழிக்க ஏதுவாக இருந்தது. ஷரம்பத் ராய் அடிக்கடி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைச் சந்தித்து மார்க்க சம்பந்தமான விஷயங்களைப் பற்றி உரையாடி வந்தார். அன்னார் பொது வாழ்வில் தோன்றி புதிய கலாச்சாரத்தின் தவறுகளை மக்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டிய காலம் வந்துவிட்டது.

1872 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25 ஆம் தேதியில் பெங்களூரிலிருந்து வெளியான மன்ஷூரே முஹம்மதீ என்னும் பத்திரிகை மூலம் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் முக்கியமான ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள். மனிதர்களுக்கிடையே உள்ள உறவில் அனைத்து நற்பண்புகளுக்கும் அடிப்படையாக விளங்குவது உண்மையே. எனவே ஒரு மார்க்கம் உண்மைக்கு வழங்கும் முக்கியத்துவத்தை வைத்தே அதன் உண்மைத்தன்மை தீர்மானிக்கப்பட வேண்டும். தமது 20 ஆண்டு கால ஆய்வின் அடிப்படையில் உண்மைக்கு இஸ்லாம் வழங்கும் முக்கியத்துவத்தை உலகத்தில் வேறு எந்த மார்க்கமும் வழங்கவில்லை என்ற முடிவுக்குத் தாம் வந்திருப்பதாக அவர்கள் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்கள். எனவே வேறு எந்த மார்க்கத்தைச் சேர்ந்த எவராவது தமது மார்க்கத்தின் வேத நூல்களிலிருந்து, தாம் (ஹஸ்ரத் அஹ்மது அலைஹிஸ்ஸலாம் அவர்கள்) இஸ்லாமிய நூல்களிலிருந்து எடுத்து வைக்கும் ஆதாரங்களை மிஞ்சக்கூடிய அல்லது அதற்குச் சமமான, பாதி, இல்லாவிட்டால் மூன்றில் ஒரு பகுதியையாவது எடுத்துக்காட்டும் நபருக்கு தாம் ரூ.500/– வழங்குவதாக அறிவித்தார்கள். ஆனால் எவருமே அந்தச் சவாலை ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை.

1877 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7 ஆம் தேதி வக்கீல் என்ற பத்திரிகையில் ஆரிய சமாஜத்தின் சார்பில் ஓர் அறிக்கை வெளியிட்டது. அதில், “ஆன்மாக்கள் எண்ணிலடங்காதவை. அவற்றின் எண்ணிக்கை இறைவனக்குக் கூட தெரியாது. எனவே அவை எப்போதும் முக்தி அடைந்து கொண்டே இருக்கும். அவை ஒருபோதும் முடிவுக்கு வரமாட்டா” என்று குறிப்பிட்டிருந்தது.

இது சர்வ வல்லமையுள்ள இறைவனுக்குச் செய்யப்பட்ட மிகப்பெரிய அவமரியாதை என்று ஹஸ்ரத் அஹ்மது (அலை)

அவர்கள் கருதினார்கள். எனவே இறைவனின் மகிமையை நிலை நிறுத்த ஆயத்தமானார்கள். இந்த நம்பிக்கைக்கு எதிராக தொடர்ச்சியாகப் பல கட்டுரைகள் எழுதினார்கள். அவை அமிர்தசரஸிலிருந்து வெளிவந்த ‘ஸஃபீரே ஹிந்த்’ என்ற பத்திரிகையில் 9.2.1878 முதல் 9.3.1878 வரை தொடர்ந்து வெளியிடப்பட்டன. இந்தக் காலகட்டத்தில் சுவாமி தயானந்த சரஸ்வதி பஞ்சாப் பகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். ஆரிய சமாஜத்தின் அறிக்கையில் காணப்பட்ட கருத்தின் உண்மையை நிரூபிக்க முன்வரும் ஆரிய சமாஜத்தினருக்குத் தாம் ரூ. 500/– பரிசு வழங்கத் தயார் என்று சவால் விடுத்திருந்தார்கள்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எடுத்து வைத்திருந்த வாதங்கள் எந்த அளவுக்கு உறுதியானவையாக இருந்தன என்றால், பஞ்சாப் மாநில ஆரிய சமாஜத்தின் செயலாளராக இருந்த L. ஜீவன் தாஸ் என்பவர், ஹஸ்ரத் அஹ்மது (அலை) உண்மையானவை அல்ல என நிரூபித்த நம்பிக்கை ஆரிய சமாஜத்தின் முக்கியமான கொள்கைகளுள் ஒன்றல்ல என்று அறிக்கை விடும் கட்டாயத்திற்கு ஆளானார். அதற்கும் ஒரு படி மேலே சென்று, ஆரிய சமாஜ உறுப்பினர்கள் சுவாமி தயானந்த சரஸ்வதியைக் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றுபவர்கள் அல்ல என்று அதே பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் கூறியிருந்தார். அவர்கள் சுவாமி தயானந்த சரஸ்வதி கூறும் அனைத்தையும் அப்படியே நம்பிவிட மட்டார்கள். அவை புத்திக்குப் பொருந்தினால் மட்டுமே ஏற்றுக் கொள்வர் என்றும் கூறினார். இது ஆரிய சமாஜத்தின் நிறுவனருக்குக் கிடைத்த மிகப்பெரும் பின்னடைவாகும். ஆனாலும் அவர் மறுப்பு எதுவும் வெளியிடவில்லை. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் கட்டுரைகளுக்குப் பதிலும் எழுதவில்லை. மாறாக ஆன்மாக்கள் எண்ணிலடங்காதவையல்ல; அதே நேரத்தில் ஆன்மாக்கள் தொடர்ந்து மறுபிறவி எடுத்துக் கொண்டே இருக்கின்றன என்று அறிவித்தார். இந்த விஷயம் குறித்து விவாதிக்க வரும்படி அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குக் கடிதம் மூலம் அழைப்பு விடுத்தார். இந்த நோக்கத்திற்காக ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த மூவரை அனுப்பி வைத்தார். இந்த அழைப்பை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் உடனடியாக ஏற்றுக் கொண்டார்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தயானந்த சரஸ்வதிக்கு எழுதிய திறந்த மடல் லாஹூரிலிருந்து வெளிவந்த ‘பிரதல் ஹிந்த்’ என்ற பத்திரிகையில் 1878 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெளியிடப்பட்டது. இந்தப் பத்திரிகையின் ஆசிரியரான பண்டிட் சிவநாராயணன் அக்னி ஹோத்ரி என்பவர் இந்தக் கடிதத்தைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

“இதுநாள் வரை தயானந்த சரஸ்வதியின் போதனைகளின் படி வேதங்களின் அடிப்படையில் ஆன்மாக்கள் எண்ணிலடங்காதவை என ஆரிய சமாஜத்தினர் நம்பி வந்தனர். ஆனால் இப்போது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் கடிதத்திலிருந்து தெரிய வருவது என்னவென்றால், அவர் இந்தக் கொள்கைக்கு மறுப்புத் தெரிவித்ததும், ஆன்மாக்கள் மறுபிறவி எடுப்பது உண்மை என்றாலும், அவற்றின் எண்ணிக்கை அளவிட முடியாதவையல்ல என்று தயானந்த சரஸ்வதிதே ஒப்புக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். எனினும் நாம் இங்கு குறிப்பிட விரும்புவது என்னவென்றால்,

1. தயானந்த சரஸ்வதி வேதங்களின் அடிப்படையில் ஆன்மாக்கள் எண்ணிலடங்காதவை என்றும், அவை சுயமாக நிலைபெற்றவை என்றும் தம் பக்தர்களை நம்பிக்கை கொள்ளச் செய்தார். ஆனால் இப்போது அந்தக் கொள்கை மறுக்கப்படும் பொழுது ஆன்மாக்கள் எண்ணிலடங்காதவையல்ல என்று ஒப்புக் கொள்வதிலிருந்து தயானந்த சரஸ்வதி வேதங்களுக்கு முரணாகப் பேசுகிறார் என்று தெளிவாகத் தெரிகிறது.




2. இப்போது தயானந்த சரஸ்வதி கூறும் விஷயங்களையே உண்மையில் வேதங்களும் கூறுகின்றனவென்றால், அது தயானந்த சரஸ்வதியின் தலைமை பண்பையே கேள்விக்குரியதாக ஆக்குகிறது. ஏனெனில் அவர் வேதங்களிலிருந்து இரண்டு முரண்பட்ட கருத்தக்களை எடுத்து வைக்கிறார்.

3. வேதங்கள் இந்த விஷயத்தைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை என்றால் அது வேதங்களுடைய குறைபாடாக அமையும்.

அந்தப் பத்திரிகை ஆசிரியர் ஆரிய சமாஜத்தின் அமிர்தசரஸ் செயலரான பாவா நாராயண் சிங்கிடம் இப்பொழுது தயானந்த சரஸ்வதியின் முரண்பட்ட கொள்கையை அவர் ஏற்றுக் கொள்கிறாரா என வினவினார். இதற்கு பாவா பதில் ஏதும் கூறவில்லை.

இந்நிகழ்ச்சி இறைஞானம் என்னும் தூய ஆவி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் மீது எவ்வளவு அற்புதமான விதத்தில் இறங்கியது என்பதைக் காட்டுகிறது.

மலாவாமால் என்ற இந்துவுக்கும், ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கும் தொடர்பு ஏற்பட்டது. இவர்கள் இருவரிடையே ஏற்பட்ட உறவு இவ்வாறு ஆரம்பித்தது: ஒருநாள் மலாவாமால் தம் ஆசிரியரான பீர் முஹம்மதுடன் மஸ்ஜித் அக்ஸாவிற்கு வருகை தந்தார். அப்போது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இஷா தொழுவதற்காக அங்கு வந்தார்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மலாவாமாலைப் பற்றி பீர் முஹம்மதிடம் விசாரித்த பொழுது, அவர் காதியானைச் சேர்ந்த சோஹன்லால் என்பவரின் மகன் என்று அறிமுகப்படுத்தினார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மலாவாமாலோடு சிறிது நேரம் உரையாடினார்கள். அப்போது இஸ்லாத்தின் அழகிய தன்மையை எடுத்துரைத்தார்கள். சில தினங்களுக்குப் பிறகு மலாவாமால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வீட்டுக்கு அருகில் சந்திக்க நேர்ந்தது. அப்போது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அவரிடம் அவ்வப்போது வந்து தம்மைச் சந்திக்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள். சில மாதங்களில் அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் நன்கு பழக்கமானார்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு நேர்மையான மனிதராக இருப்பதாலும் எப்போதும் அவர்களைச் சுற்றி அறிவும், ஒழுக்கமும் நிறைந்த சூழ்நிலை நிலவுவதாலும், அவர்களோடு சேர்ந்திருப்பது தமக்கு விருப்பமான ஒன்று என மலாவாமால் கூறினார். நேர்மையான ஒரு மனிதரின் வாழ்க்கைதான் நற்பண்புகளைக் கற்றுக் கொடுக்கும் மிகச் சிறந்த பாடமாகும். சில காலம் மலாவாமால் தினமும் ளுஹர் தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை மஸ்ஜித் அக்ஸாவில் சந்தித்து உரையாடி வந்தார். பிறகு சுபுஹ் தொழுகைக்குப் பின் சந்தித்து வந்தார். மார்க்க சம்பந்தமான உரையாடலோடு அவருக்குச் சில நீதிக்கதைகளையும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கூறி வந்தார்கள். சில நேரங்களில் அவர்கள் இருவருக்குமிடையில் மார்க்க சம்பந்தமான விவாதங்களும் நடைபெற்றதுண்டு. ஆனால் அவற்றில் ஒருபோதும் வெறுப்புணர்ச்சி இருந்ததில்லை. அன்னார் (அலை) சொன்ன சம்பவங்கள் எல்லாம் மஸ்னவீ மவ்லானா ரூமி அவர்களின் நூல்களிலிருந்தும் தத்கிரதுல் அவ்லியா என்ற நூலிலிருந்தும் ஆகும்.



1877 அல்லது 1878 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஆரிய சமாஜத்திற்கு எதிராகவும், மற்ற மார்க்கங்களை விட இஸ்லாத்தின் சிறப்பை விளக்கியும் ஒரு கட்டுரை எழுதினார்கள். அந்தக் கட்டுரையில் கையெழுத்துப் பிரதியை இரு புறமும் திறந்த கவரில் வைத்து பத்திரிகைகளுக்கு உரிய தபால் முத்திரையோடு அமிர்தசரஸில் இருந்த 'வக்கீல்' அச்சகத்திற்கு அனுப்பி வைத்தார்கள். இது 1866 ஆம் வருடத்தில் அலுவலகச் சட்டத்தின் 12 –வது பிரிவின் கீழ் அனுமதிக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் அந்தக் கட்டுரை தொடர்பாக அச்சகத்தின் மேலாளருக்கு எழுதிய சில குறிப்புகளையும் அந்தக் கவரில் வைத்து அனுப்பியிருந்தார்கள். அந்தக் கவரில் கடிதத்தை வைத்து அனுப்புவது தபால் அலுவலக விதிகளுக்கு எதிரானதாகும். 1877 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7 ஆம் தேதி வெளியிடப்பட்ட இந்திய அரசின் உத்தரவு எண் 2442 –ன் பிரிவு 43 –ன் படி இந்த விதி மீறலுக்கான தண்டனை ரூ.500/– வரை அபராதமோ அல்லது ஆறு மாத சிறை தண்டனையோ ஆகும். (1866 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சட்டம் 14 –ன் பிரிவு 56) அந்த அச்சகம் மார்க்க வெறி நிறைந்த கிறித்தவரான ருல்யாராம் வக்கீல் என்பவருக்குச் சொந்தமானதாக இருந்தது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைச் சட்டரீதியாகச் சிக்கலில் மாட்டி வைக்க நினைத்த ருல்யாராம் சட்டப்பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்தார். இந்த வழக்கு விசாரணைக்காக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் குர்தாஸ்பூருக்கு அழைக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வழக்கறிஞர்களிடம் ஆலோசனை கேட்டார்கள். தாம் அந்தக் கடிதத்தை அந்தக் கவருக்குள் வைக்கவே இல்லை என்று மறுப்பதுதான் அதிலிருந்து தப்புவதற்கான ஒரே வழி என்று அவர்கள் ஆலோசனை கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தாம் உண்மையைத் தவிர வேறொன்றையும் கூறப் போவதில்லை என்பதில் உறுதியாக இருந்தார்கள். உண்மையைக் கூறாமல் இருப்பதற்கு எந்தச் சமாதானம் கூறினாலும் அது சரியாக இருக்காது. மனித வாழ்வின் எல்லா நிலைகளிலும் உண்மைக்கே முதலிடம் வழங்கப்பட வேண்டும். எனவே அன்னார் (அலை) அவர்களின் வழக்கறிஞரான சவுத்ரி அலீ அஹ்மது வழக்கில் அவர்களுக்காக ஆஜராவதிலிருந்து விலகிக் கொண்டார். ஆனால் நலொழுக்கங்களை நிலைநிறுத்துவதில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு கோழை அல்ல. அவர்கள் ஆங்கிலேய நீதிபதி முன் தாமே நேரடியாக ஆஜரானார்கள். நேர்மையான சிந்தனையே அவர்களுடைய ஆயுதமாக இருந்தது. உண்மையே அவர்களுடைய ஆற்றலாக இருந்தது. அவர்கள் உண்மையை மட்டும் நீதிமன்றத்தில் கூறினார்கள். அவர்கள் தமது செயலுக்கு விளக்கமாக அந்தக் கடிதத்தில் இருந்த விஷயங்கள் தனிப்பட்டவை அல்ல என்றும், கட்டுரைக்குத் தொடர்புடைய விஷயங்கள்தாம் அதில் எழுதப்பட்டிருந்தது என்றும் தபால் துறையை ஏமாற்றுவதோ, பொருளாதார நஷ்டத்தை ஏற்படுத்துவதோ தமது நோக்கமல்ல என்றும் எடுத்துக் கூறினார்கள். அவர்களின் விளக்கத்தில் இருந்த

*(தொடர்ச்சி 23-ஆம் பக்கம்...)*

2017-ஆம் ஆண்டு காதியான் ஆண்டு மாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவு

# உலக சமுதாயங்களால் வாக்களிக்கப்பட்டவர்

தன்வீர் அஹ்மது காதிம் சாஹிப்

தமிழாக்கம்: இப்னு வஸீம்

هُوَ الَّذِىٓ اَرۡسَلَ رَسُوۡلَهٗ بِالۡهُدٰى وَدِيۡنِ الۡحَقِّ لِيُظۡهِرَهٗ عَلَى الدِّيۡنِ كُلِّهٖ ۙ وَلَوۡ كَرِهَ الۡمُشۡرِكُوۡنَ

பொருள்: அவனே தனது தூதரை நேர்வழியுடனும் உண்மையான மார்க்கத்துடனும் (ஏனைய) எல்லா சமயங்களின் மீதும் (இதனை) வெற்றி பெறச் செய்வதற்காக அனுப்பினான். இணைவைப்பவர்கள் எவ்வளவு வெறுத்தாலும் சரியே. (9: 33)

யதா யதா ஹி தர்மஸ்ய ஃக்லானிர் பவத்தி பாரத
அப் யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்!
பரித்ராணய ஸாதூநாம் விநாஷாய ச துஷ்க்ருதாம்
தர்மஸம்ஸ்தாபநார்தாய ஸம்பவாமி யுகே யுகே !!

மதிப்பிற்குரிய அமர்வின் தலைவர் அவர்களே! கண்ணியத்திற்குரிய அவையோரே!

இன்றைய இந்த அருளுக்குரிய தருணத்தில், எனது சொற்பொழிவின் தலைப்பு உலக சமுதாயங்களால் வாக்களிக்கப்பட்டவர் ஆகும். அதாவது, எவரது வருகையைப் பற்றி பல்வேறு சமுதாயங்களில் முன்னறிவிப்புகள் காணப் பெறுகின்றனவோ அந்த சீர்திருத்தவாதி பற்றியதாகும்.

கண்ணியத்திற்குரிய அவையோரே!

இன்றைய இந்தக் காலகட்டத்தில் மார்க்கமின்மையும் இறைமறுப்பும் ஓங்கியுள்ளன. மக்கள் தீமைகளிலும் தீய செயல்களிலும் அளவு கடந்து விட்டனர். பாவம், பொய் மற்றும் வெட்கக்கேடு எந்த அளவுக்கு அதிகரித்து விட்டதென்றால், மார்க்கத்திற்கும் அதன் போதனைகளுக்கும் சிறிதும் மதிப்பு எஞ்சியிருக்கவில்லை. மனிதன், தன் புதைக்குழிக்குள் விழுவதை நிர்பந்திக்காத எந்தத் தீமை மற்றும் தீயொழுக்கம்தான் மீதமுள்ளது? அதிலிருந்து தப்புவதற்கான எந்த வழியும் அவனுக்கு தென்படுவதில்லை. மதத் தலைவர்களாகட்டும், அரசியல் தலைவர்களாகட்டும், சமூகத் தலைவர்களாகட்டும் மற்றும் பொதுமக்களாகட்டும், அனைவரும் எந்த அளவு பாவங்களில் மூழ்கியுள்ளார்கள் என்றால் அதற்கு உதாரணத்தைக் காட்டுவதில் உலகின் முந்தைய வரலாறு தோற்றுவிடுகிறது.

ஆக! இப்பொழுது திருக்குர்ஆனின் வழிகாட்டலுக்கேற்ப ظَهَرَ الۡفَسَادُ فِى الۡبَرِّ وَالۡبَحۡرِ அதாவது, நிலத்திலும் கடலிலும் எல்லாப் புறமும் குழப்பமே பரவியுள்ளது. (அர் ரூம்: 42) அதாவது, மார்க்கவாதிகளாகட்டும் மார்க்கமற்றவர்களாகட்டும் அனைவரும் பாவங்களில் மூழ்கியுள்ளனர்.

குரு கிரந்தத்தின் வழிகாட்டலுக்கேற்ப, கூட் அமாவஸ் சந்தர்மா தெய்ஸே நாஹீ கெ சட்யா. அதாவது, சந்திரன் உதிக்காத, நிறைந்த அமாவாசையைப் போன்று உண்மையின் நிலை இருக்கும்.

இதற்குக் காரணம், மனிதன் இந்த அண்டசராசரத்தைப் படைத்துப் பரிபாலித்துக் கொண்டிருக்கும் அந்த இறைவனை



மறந்து விட்டான். ஒருபுறம் அடிதடிகளால், ஒருபுறம் கொலை தாக்குதல்களால், ஒருபுறம் நிலநடுக்கங்களால், ஒருபுறம் வெள்ளத்தால், ஒருபுறம் பலவகையான கொடிய நோய்களால் மற்றொருபுறம் சமுதாயங்கள் மற்றும் நாடுகளின் பரஸ்பர போர்களினால் மக்கள் புழு பூச்சிகளைப் போல் அழிந்து கொண்டிருக்கின்றனர்.

உலகம், சூர்தாஸ் அவர்கள் கூறியுள்ள துஷ்ட் துஷ்ட் கோ எய்ஸே காட்டே ஜெய்ஸே கீட் மரே. அதாவது, தீயவர் தீயவரைப் புழுக்களைக் கொல்வது போன்று கொல்வார்.

இப்பொழுது மூன்றாம் உலகப் போர் உலகை அழிப்பதற்காக வாயைப் பிளந்துக் கொண்டிருக்கிறது. அதன் அழிவைப் பற்றிக் கேட்டு மனிதன் புல்லரித்துப் போகிறான். அதற்குக் காரணம்:

பர்மேஷர்தே பலியா(ன்) வயாபன் சபே ரோஃக் அதாவது, மனிதன் இறைவனை மறந்து விடும் போது இவ்வகையான கஷ்டங்கள் மற்றும் பிரச்சனைகள் அவனை சூழ்ந்து கொள்கின்றன.

செவியேற்றுக் கொண்டிருப்போரே!

சீக்கிய மதத்திலும் இக்காலத்தின் அவல நிலையைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. முன்னறிவிப்புகளும் உள்ளன. அவற்றில் இவ்விஷயம் கூறப்பட்டுள்ளது: அதாவது, ஒரு காலம் வரவிருக்கின்றது. அதில் மனிதன் மார்க்கத்தை முற்றிலும் மறந்துவிடுவான். மனிதத்துவம் என்பது அழிந்துவிடும். தீமைகள் மற்றும் பாவங்களால் உலகம் நிரம்பி விடும்.

கூறப்பட்டுள்ளதன் பொருள்: ஒரு காலம் வரவிருக்கின்றது. அதில் அநீதியிழைத்தல் அதிகரித்துவிடும். ஹிந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய இரு பிரிவினரும் தமது மார்க்கத்தை விட்டுவிடுவார்கள். ஹிந்துக்கள் காயத்ரி மந்திரம் திருப்பண மந்திரம் ஆகியவற்றை மறந்துவிடுவார்கள். முஸ்லிம்கள் ஃபாத்திஹா மற்றும் துரூதை அறியாதவர்களாகி விடுவார்கள். தேவி மற்றும் தீர்த்த யாத்திரைகளை மக்கள் விட்டுவிடுவார்கள்.

உண்மைஇறைவனை எவரும் அடையாளம் காணமாட்டார். எவரும் அறிவுரைகளைக் கேட்கமாட்டார். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தத்தமது மார்க்க நூல்கள் மற்றும் இறையடையாளங்களை மறந்துவிடுவார்கள். முஸ்லிம்கள் தொழுகையையும் நோன்பையும் விட்டுவிடுவார்கள். தூரத்திலிருந்து பள்ளிக்கு சலாம் கூறுவார்கள். இவ்வாறே இவ்விஷயங்கள் பூர்த்தியாகும்.

இவ்வாறே! ஹிந்து மதத்தின் ஸ்ரீமத் பகவத் கீதை, கல்கி புராணம், பிரம்மபுராணம், விஷ்ணு புராணம், கரஃக் சங்கீதம், ராமசரிதை மானஸம், சிகந்த புராணம் மற்றும் மஹாபாரதம் ஆகியவற்றில் கலியுகத்தின் இறுதி பகுதியின் எந்த அறிகுறிகள் மற்றும் அடையாளங்கள் கூறப்பட்டுள்ளனவோ அவை ஏறக்குறைய ஒத்துப்போகின்றன. அவற்றின் சுருக்கம் மஹாபாரதத்தில் எழுதப்பட்டுள்ளது: மஹாராஜா யுதிஷ்ட்டர் மார்க்கண்டேய ரிஷியிடம் கலியுகத்தைப் பற்றிக் கேட்டபோது மார்க்கண்டேய ரிஷி கூறினார்:

ராஜாவே! கலியுகத்தில் இவ்வுலகின் நிலை என்னவாகும்? அதை நான் கூறுகின்றேன் கவனமாகக் கேள்! கலியுகம் ஆரம்பித்தவுடன் மார்க்கத்தின் நான்கில் ஒரு பங்கு மட்டுமே எஞ்சியிருக்கும். அதன் இறுதியில் அதுவும் முடிந்துவிடும். அப்பொழுது மக்கள் பாவங்களின் பால் அதிக கவனம் செலுத்துவர். மக்களின் இயல்புகள் சீர்கெட்டுவிடும். பிராமணர்கள் வேதங்களை விட்டுவிடுவார்கள். வேதமற்றவர்களாகி விடுவார்கள்......

அப்பொழுது உண்மையின் கழுத்து நெறிக்கப்படும். பிராமணன் சத்திரியனையும் வேஷ முஜாஹிதாவையும் மற்றும் உண்மையையும் விட்டுவிட்டு சூத்திரர்கள் போலாகி விடுவான். மக்கள் ஒருவர் மற்றவரின் பொருளை அபகரிக்க முயற்சி செய்வார்கள். பெண்கள் ஆண்களை ஆள்வார்கள். விபச்சாரம் பெரிதும் அதிகரித்து விடும். இறைவனை வணங்குவதன் பக்கம் மக்கள் கவனம் செலுத்தமாட்டார்கள். தகுதியற்ற மற்றும் பாவிகளாகிய அதிகாரிகளின் காரணமாக மக்கள் வரிகளின் சுமைக்குக் கீழ் அமுங்கிவிடுகின்றனர். மக்கள் மத்தியில் தாய், தந்தையருக்கு கண்ணியம் இருக்காது. இந்தச் சூழ்நிலைகள் உருவாகும் போது கல்கி அவதாரம் வெளிப்பட்டு பாவங்களை அழித்து விடுவார்.

யூத மற்றும் கிறித்தவ மதங்களிலும் இறுதி காலத்தின் நிலைமைகள் இவ்வாறு கூறப்பட்டுள்ளன:

ஆனால், ஒன்றை அறிந்து கொள்ளுங்கள்! இறுதி காலத்தில் தீய நாட்கள் வரும். ஏனென்றால், மக்கள் தன்னலவாதிகளாகவும் அநீதியிழைப்பவர்களாகவும் பெருமையடிப்பவர்களாகவும் ஆணவம் கொண்டவர்களாகவும் தீமைகள் செய்யக்



கூடியவர்களாகவும் தாய் தந்தைக்குக் கட்டுப்படாதவர்களாகவும் நன்றி கெட்டவர்களாகவும் அசுத்தமானவர்களாகவும் நேசமற்றவர்களாகவும் அவதூறுகள் கூறுபவர்களாகவும் தீமைக்கு அஞ்சாதவர்களாகவும் தீயவொழுக்கமுடையவர்களாகவும் நற்செயல்களுக்கு எதிரிகளாகவும் ஏமாற்றுபவர்களாகவும் பிடிவாதங் கொண்டவர்களாகவும் அகங்காரங் கொண்டவர் களாகவும் மற்றும் இறைவனை விட்டுவிட்டு சுகபோகங்கள் மீது மோகம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

(தீமீதஹ் யுஸ் எண் 2 வசனங்கள் 1 முதல் 5 வரை)

அவையோரே!

திருக்குர்ஆனுக்கேற்ப, நான் முன்னரும் கூறியுள்ளேன். உலகத்தில் நாலாப்புறமும் குழப்பமேபரவியிருக்கும். இக்காலத்தின் முஸ்லிம்களின் பெரும் பெரும் அறிஞர்களும் கூட, உலகத்தின் நிலை, குறிப்பாக, முஸ்லிம்களின் நிலை சீர்கெட்டுவிட்டது என ஒப்புக் கொள்கின்றனர். ஆக! முஸ்லிம்களின் பெரிய தலைவராகத் திகழ்ந்த சர் சய்யித் அஹ்மத் கான் எழுதகிறார்:

இன்று, இறைவனின் ஏகத்துவத்தைப் போதித்தவர்கள், உலகத்தில் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் பரப்பியவர்கள், சிறிது நேரத்திற்கு நம்மிடம் வந்தார்கள் என்றால், நான் எனது மற்றும் அனைத்துலகின் உயிரும் எவன் கையில் உள்ளதோ அவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன்; அவர்கள் ஏகத்துவ போதனை அளித்த அவர்களின் சமுதாயமேஇது என்று மிகச் சிரமமாகவே அடையாளம் கண்டு கொள்வார்கள்.

(துஹ்ஃபீதுல் அக்லாக் தொகுதி 1 பக்கம் 344)

இவ்வாறே, மவ்லவி ஷக்கீல் அஹ்மத் ஸஹ்ஸவானீ ஹிஜ்ரி 1309-இல் எழுதியுள்ளார்:

காலத்திலிருந்து அஹ்மதின் மார்க்கத்தின் பெயர் அழிக்கப்படுகிறது

இது ஒரு தண்டனையாகும், என் இறைவா! இது என்ன நடக்கிறது!

ஏன் உண்மையில் நிலைத்திருக்கும் மஹ்தி தோன்றுவதில்லை?

ஈஸா இறங்குவதில் உள்ள தாமதம் தான் என்ன இறைவா!

புகழ் பெற்ற உருது கவிஞர் அல்லாமா ஹாலி எழுதுகிறார்:

அந்த மார்க்கம், எதிலிருந்து உலகின் சபைகள் ஒளிமையமானதோ
இன்று அதன் சபைகளில் விளக்கும் மெழுகுவர்த்தியும் கூட இல்லை!
எனக்கு அழுகை வருகிறது! உம்மத்தின் கப்பலின் பாதுகாவலனே
இந்தக் கப்பல் அழிவிக்கு அருகில் சென்று கொண்டிருக்கிறது!

கண்ணியத்திற்குரிய அவையோரே! நாம் முன்னரே செவியேற்றதற்கேற்ப அதாவது, ஒவ்வொரு மார்க்கத்தின் புனித நூல்களின் படியும் கலியுகத்தில் உலகின் நிலை மிக மோசமானதாகி விடும். எல்லா மார்க்கங்களிலும் இப்படிப்பட்ட நிலையைப் பற்றிக் கூறி, உடன் தீர்வும் கூறப்பட்டுள்ளது. அதாவது, இறுதிகாலத்தில் இருள் சூழ்ந்து விடும் போது, தீயவர்களையும் பாவிகளையும் இல்லாமற் செய்து, மார்க்கத்தைப் பாதுகாப்பதற்கு ஒரு வழிகாட்டி வருவார். அவர் கலியுகத்தின் அவதாரம் அல்லது இஸ்லாமிய உவமையில் உலக சமுதாயங்களால் வாக்களிக்கப்பட்டவர் என்ற பெயரால் அறியப்படுகிறார். ஆக! புனித கீதையில் இந்தக் கூற்று இடம் பெற்றுள்ளது. அதை நான் எனது உரையின் துவக்கத்திலேயே வாசித்துக் காட்டி விட்டேன்.

அதன் பொருள்: அர்ஜுனா! எப்பொழுதெல்லாம் தர்மம் தாழ்ந்து அதர்மம் தலை தூக்குமோ அப்பொழுதெல்லாம் நான் வழிகாட்டியை அனுப்புவேன். நல்லவர்களைப் பாதுகாப்பதற்காகவும் தீயவர்களை இல்லாமற் செய்வதற்காகவும் மார்க்கத்தைப் பாதுகாப்பதற்காகவும் வழிகாட்டியின் ரூபத்தில் வெளிப்படுவேன். (ஸ்ரீமத் பகவத் கீதை, அத்தியாயம் 4 ஸ்லோகம் 78)

இவ்வாறே! யூத மற்றும் கிறித்தவ மதத்தின் மார்க்க நூல்களில் பலவிடங்களில் இம்முன்னறிவிப்பு இடம் பெற்றுள்ளது. அதாவது, இறுதி காலத்தில் உலகின் சீர்திருத்தத்திற்காக இறைவன் ஒரு வழிகாட்டியை அனுப்புவான். மலாக்கி நபியின் நூலில் எழுதப்பட்டுள்ளது: நீங்கள் உங்கள் பேச்சுக்களால் இறைவனை அதிருப்தி படுத்தி விட்டீர்கள். பாருங்கள்! நான் எனது தூதரை அனுப்புவேன். அவர் என் கண்முன் என் வழியை சரி செய்வார். அந்த இறைவன், எவனை நீங்கள் தேடுகின்றீர்களோ; ஆம்! வாக்குறுதிகளின் தூதன் எவனால் நீங்கள் மகிழ்ச்சியடைகிறீர் களோ அவன்; தனது வடிவில் திடீரென வருவான். பாருங்கள்! அவன் நிச்சயம் வருவான். படைகளின் இறைவன் கூறுகிறான். (மலாக்கி நபியின் நூல் தொகுதி 2 வசனம் 17)

கிறித்தவ மார்க்கத்தின் படி: ஹஸ்ரத் மஸீஹ் நாஸிரீ (அலை) அவர்கள் தமது இரண்டாம் வருகைப் பற்றிக் கூறுகிறார்கள்:

பாருங்கள்! உங்கள் வீடு உங்களுக்காக காலியாக விடப்படுகிறது. ஏனெனில், நான் உங்களுக்குக் கூறுகிறேன்: இனி, இறை பெயரோடு வரும் அவர் அருளுக்குரியவர் என்று நீங்கள் கூறாத வரை நீங்கள் என்னை மீண்டும் காணமாட்டீர்கள். (மத்தேயு, தொகுதி 23, பக்கம் 38-39) இவ்வாறே, சீக்கிய மதத்திலும் வருகிறது:

ஜப் ஜப் ஹோத் அர்ஷட்(ஹ்) உ(ப்)பாரா
தப் தப் தே த(ஹ)ர்த் அவ்த்தாரா

அதாவது, எப்பொழுதெல்லாம் உலகில் பாவம் பரவுகின்றதோ அப்பொழுதெல்லாம் உலகில் இறைவன் புறமிருந்து அவதாரம், வழிகாட்டி பிறக்கிறார். இது தொடர்பாக குரு பானியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

ஹர் ஜுஃக் ஜுஃக் ப(ஹ)கத் உ(ப்)பாயா
பேஜ் ரக்(ஹ்)தா ஆ(ப்)பா ராம் ராஜே

இவ்வாறே! இஸ்லாத்திலும் இந்தக் கலியுகம் மற்றும் இறுதி காலத்தில் ஒரு இமாம் மஹ்தி வருவது பற்றி நற்செய்தி வழங்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீது இந்தத் திருக்குர்ஆன் வசனம் இறங்கிய போது:

وَّاٰخَرِيۡنَ مِنۡهُمۡ لَمَّا يَلۡحَقُوۡا بِهِمۡ‌ؕ وَهُوَ الۡعَزِيۡزُ الۡحَكِيۡمُ

பொருள்: மேலும் இதுவரை, அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை அனுப்பினான்.) அவன் வல்லமைமிக்கவனும் நுண்ணறிவுள்ளவனமாவான். (அல் ஜுமுஆ: 4)

அப்பொழுது, நபித் தோழர்கள் (ரிஸ்) வினவினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இந்த மற்றவர்கள் என்றால் யார்? அப்பொழுது ஹுஸுர் (ஸல்) அவர்கள் (அச்சமயம் அந்த சபையில் அமர்ந்திருந்த) ஹஸ்ரத் சல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்களின் தோளில் கையை வைத்துக் கூறினார்கள்:

லவ் கானல் ஈமானு இன்தஸ் ஸுரய்யா லனா லஹு ரிஜாலுன் அவ் ரஜுலுன் மின் ஹாஉலாஇ. (நூல்: சஹீஹுல் புகாரி, அதிகாரம்: தஃப்ஸீருல் குர்ஆன்)

பொருள்: இறுதி காலத்தில் ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்டாலும் இவர்களிலிருந்து (அதாவது பாரசீக வம்சத்திலிருந்து) ஒருவர் அல்லது பலர் அதை மீண்டும் பூமிக்குக் கொண்டு வருவர்.


செவியேற்றுக் கொண்டிருப்போரே!

இந்தத் திருக்குர்ஆன் வசனம் மற்றும் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் ஹதீஸிலிருந்து இறுதி காலத்தில் பாரசீக வம்சத்தைச் சார்ந்த ஒரு சீர்திருத்தவாதி தோன்றுவார் என்பது நிரூபணமாகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மேலும் கூறினார்கள்:

யூஷிகு மன் ஆஷ மி(ன்)கும் அ(ன்) யல்கா ஈஸப்ன மர்யமஇமாமம் மஹ்திய்யா (முஸ்னத் அஹ்மத், கிதாப் பாக்கி மஸ்னதுல் முகஸ்ஸிரீன்)

அதாவது, உங்களில் உயிருடனிருப்பவர் மர்யமின் மகன் ஈஸாவை இமாம் மஹ்திய்யாகக் காணப்பெறுவார். மேலும்





கூறினார்கள்:

லல் மஹ்திய்யு இல்லா ஈஸப்னு மர்யம் (ஸுனன் இப்னு மாஜஹ், கிதாபுல் ஃபிதன்)

இந்த ஹதீஸிலிருந்து ஈஸாவும் மஹ்தியும் இரு வேறு நபர்களல்ல மாறாக, ஒரு நபரின் இரு பெயர்கள் எனத் தெரிய வருகிறது.

பிறகு, வரக்கூடிய மஹ்தி மஸீஹ் ஹிஜ்ரி 13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மற்றும் 14 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் தோன்றுவார் எனும் அளவுக்கு இந்த விஷயத்தைத் தெளிவு படுத்தி விட்டார்கள். இது தொடர்பாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

இதா மளத் அல்ஃபு(ன்) வ மிஅதானி வ அர்பஊன ஸனத்த(ன்) யப்அஸுல்லாஹுல் மஹ்திய்ய. (அந் நஜ்முஸ் ஸாகிப் தொகுதி 2 பக்கம் 209)

அதாவது, எனக்குப் பிறகு 1240 ஆண்டுகள் கழிந்த பிறகு அதாவது 13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் தோன்றுவார்கள்.

செவியேற்றுக் கொண்டிருப்போரே!

பைபிளின் முன்னறிவிப்புகளுக்கேற்ப கிருத்துவ பாதிரிமார்களும் ஜோதிடர்களும் கி.பி 1868-இல் மஸீஹின் இரண்டாவது வருகை நிகழும் என அறிவித்தனர். கிருத்தவ உலகம் முற்றிலும் பொறுமையிழந்து மஸீஹ் (அலை) அவர்களுக்காக காத்துக் கொண்டிருக்க ஆரம்பித்தது. இக்காலம் கடந்தும் மஸீஹ் வராததால் மிகவும் நிராசை ஏற்பட்டது.

பிறகு, ஹஸார் ஸாலஹ் சுல்தனத்தே மஸீஹ் எனும் மற்றொரு நூல் வெளியானது. அதில் பழைய கணக்கைத் திருத்தப்பட்டு 1873-ஆம் ஆண்டு நிர்ணையிக்கப்பட்டது. அதன் காரணமாக மஸீஹின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நம்பிக்கைத் துளிர்விட்டது. ஆனால் இந்தத் தேதியும் வீணாகக் கழிந்தது. கிருத்தவ உலகில் மீண்டும் நிராசை ஏற்பட்டது.

பிறகு, Mr. Albe பிரிசித்திப் பெற்ற நூல் The appointed time-ஐ வெளியிட்டார். அதில் முந்தைய அனைத்து யூகங்களையும் பொய்ப்பித்து மஸீஹின் வருகையின் இறுதி காலமாக 1898 எழுதப்பட்டது. இந்த அறிவிப்பால் கிருத்துவ உலகில் மீண்டும் ஒருமுறை மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தது. ஆனால், இந்த ஆண்டும் கழிந்தது. எந்த ஆதமின் மகனும் வானத்திலிருந்து இறங்கக் காணவில்லை. இறுதியாக, அவர்கள் நிராசையடைந்து இவ்வாறு எழுதிவிட்டார்கள்:

It is further said that the time for the coming of Messiah is expired. (தால்மூத் பக்கம் 35 மதிப்பீட்டாளர் மிஸ்டர் ஜோஸஃப் பார்க்லே)

அதாவது, வரவிருக்கும் மஸீஹின் காலம் கடந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

இதைத் தவிர இன்று வரையிலும் அவ்வப்போது கிருத்துவ பாதிரிமார்கள் தரப்பிலிருந்து மஸீஹின் இரண்டாம் வருகையின் காலம் நிர்ணையிக்கப்பட்டு வந்தது. ஆனால் எல்லா நிர்ணையிக்கப் பட்டக் காலங்களும் கடந்து விட்டன. மஸீஹ் வந்தபாடில்லை.

செவியேற்றுக் கொண்டிருப்போரே!

ஹிந்துக்களின் மதத் தலைவர்கள் ஏறத்தாழ 100 ஆண்டுகளாக, கலியுகத்தின் தாக்கம் ஏற்பட்டுவிட்டது; பாவங்கள் அளவு கடந்து விட்டன; மதமெனும் கப்பல் சுழலில் சிக்கிக் கொண்டது; மதத்தின் பெயரால் ஆயிரக்கணக்கான அநீதிகள் ஏற்படுகின்றன; எனவே, இன்றும் மீண்டும் இந்தியாவுக்கு த்வாபர யுகத்தைப் போல் கிருஷ்ணரின் தேவையுள்ளது; அவர் தனது சுதர்ஷண சக்கரத்தின் தரிசனத்தைக் காட்டி அநீதி அக்கிரமங்களையும் பாவங்களையும் தீர்த்து மீண்டும் ஒருமுறை இந்தியாவில் அமைதியையும் நிம்மதியையும் ஏற்படுத்த வேண்டியுள்ளது எனக் கூறிவருகின்றனர். (சுதர்ஷண சக்கரம், ராவல்பிண்டி 5 கார்கத் 1982 பக்ர்மீ பக்கம் 6)

ஒவ்வோர் ஆண்டும் ஜென்மஷ்டமியின் போது ஸ்ரீகிருஷ்ணரை அழைக்கப்படுகிறது. ஒரு கிருஷ்ண பக்தர் இவ்வாறு துஆ செய்கிறார்:

பாரதம் அழைக்கிறது கிருஷ்ணரே! இன்று வாருங்கள்!

திசைமாறிய மக்களைச் சீர்திருத்த இன்று வாருங்கள்!

மதத்தின் கொடி விளிம்பிலுள்ளது எப்பொழுது விழுமென்று தெரியவில்லை

பகவானே! எல்லா வேலைகளையும் விட்டு விட்டு அதைத் தூக்க வாருங்கள்!

எல்லையற்ற துக்கத்தின் காரணமாக மிகவும் களைத்து விட்டது பாரதம்

இன்பம் மற்றும் அமைதியின் புகலிடமாகிய கிருஷ்ணரே இன்று வாருங்கள்!

துரதிஷ்டத்தை நாங்கள் என்ன சொல்வது நீங்கள் தேசத்தை நேசியுங்கள்!

செல்வங்கள் சூறையாடப் படுகின்றன கிருஷ்ணரே! இன்று வாருங்கள்! (பிரமண சர்வ சிவாடாவஹ் தொகுதி 29 பக்கம் 4)

சான்றோர்களே!

முன்னரே கூறப்பட்டவாறு ஹிஜ்ரி 14-ஆம் நூற்றாண்டு அல்லது கி.பி.20-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் அனைத்து மார்க்கத்தவரும் தத்தமது வாக்களிக்கப்பட்டவருக்காகக் காத்துக்

கொண்டிருந்தனர். மார்க்கங்களின் பல்வேறு முன்னறிவிப்புகளும் கூட அவரது வருகையின் காலமாக இக்காலத்தையே கூறுகின்றன. அந்த வழிகாட்டிக்கான அனைத்து அடையாளங்களும் வெளிபட்டுவிட்டன. அதைப் பற்றியக் குறிப்பு எல்லா மார்க்க நூல்களிலும் உள்ளது. எனவே இறைவனின் கருணை பொங்கியெழ வேண்டியிருந்தது; இந்த கலியுகத்தில் அந்த வழிகாட்டி வரவேண்டியிருந்தது. எனவே, நான் உங்கள் அனைவருக்கும் மிகவும் பெருமிதத்தோடு நற்செய்தி கூறுகிறேன்:

அந்த சீர்திருத்தவாதி வந்து விட்டார்கள்; பெரும் மேன்மைபொருந்தியவாறு வந்தார்கள்; இறைக்கட்டளை மற்றும் விண்ணின் அடையாளங்களோடு தோன்றினார்கள். உறுதியாகத் தெரிந்து கொள்ளுங்கள்! யாரைப்பற்றிய நற்செய்தியை பனீ இஸ்ராயீலின் நபிமார்கள் வழங்கினார்களோ; ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களும் வழங்கினார்களோ; அவர்கள் தான் வந்துள்ளார்கள். ஆம்! யாரைப் பற்றிய நற்செய்தியை ஸ்ரீகிருஷ்ணர் (அலை) வழங்கினார்களோ; அதர்வன வேதம் வழங்கியதோ அவர்களே வந்துள்ளார்கள்.

அவர்கள் யார்? ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்கள் தான். அந்தத் தூயவர் பிப்ரவரி 13, 1835-இல் பஞ்சாப் மாநிலத்தின் குருதாஸ்பூர் மாவட்டத்தின் பட்டாலா வட்டாட்சியிலுள்ள காதியான் எனும் இடத்தில் பிறந்தார்கள். அன்னார் (அலை) முழுவுலகிலும் இவ்வாறு அறிவித்தார்கள்:

நான் மேகத்திலிருந்து சரியான தருணத்தில் பொழிந்த அந்த மழையாவேன்

நான் பகல் வெளிப்படக் காரணமான இறைவனின் அந்த ஒளியாவேன்!

திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் ஏனைய அனைத்து மார்க்கங்களின் முன்னறிவிப்புகளின் படி, அவற்றில் சிலவற்றை நான் எடுத்துரைத்தும் விட்டேன்; குறித்த நேரத்தில், இந்த அருளுக்குரிய காதியான் மண்ணில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்கள் தோன்றினார்கள். அன்னார் (அலை) அவர்கள் இவ்வாறு அறிவித்தார்கள்:

எனக்கு இறைவனின் தூய்மையான வஹீயின் மூலம், நான் அவன் தரப்பிலிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும் உறுதியளிக்கப்பட்ட மஹ்தியென்றும் அக புற வேறுபாடுகளைத் தீர்ப்பவன் என்றும் அறிவிக்கப்பட்டது. (அர் பயீன் எண் 1)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்: நான் இக்காலத்தில் இறைவன் புறமிருந்து வந்திருப்பது முஸ்லிம்களைச் சீர்திருத்துவதற்காக மட்டுமல்ல. மாறாக, முஸ்லிம்கள், ஹிந்துக்கள் மற்றும் கிறிஸ்த்தவர்கள் ஆகிய மூன்று சமுதாயங்களின் சீர்திருத்தத்திற்காகவும் தான். எவ்வாறு இறைவன் என்னை முஸ்லிம்களுக்காகவும் கிறிஸ்த்தவர்களுக்காவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக அனுப்பியுள்ளானோ; அவ்வாறே நான் ஹிந்துக்களுக்கு அவதாரமாக உள்ளேன்.

நான் 20 வருடங்களாக அல்லது அதை விட அதிக காலமாக இந்த விஷயத்தைப் பிரசித்தி படுத்தி வருகிறேன். அதாவது நான், எவற்றால் பூமி நிறைந்துள்ளதோ அந்தப் பாவங்களை அகற்ற, எவ்வாறு மர்யமின் மகன் ஈஸா வடிவில் உள்ளேனோ அவ்வாறே ராஜா கிருஷ்ணரின் வடிவிலும் உள்ளேன். அவர் ஹிந்து மதத்தின் அனைத்து அவதாரங்களிலும் பெரிய அவதாரமாக இருந்தார். (லெக்சர் ஸியால்கோட் பக்கம் 23)



இந்த அறிவிப்பை செய்ததுதான் தாமதம்; தம்மவர்களும் சரி அந்நியர்களும் சரி அனைவரும் அன்னாருக்கு எதிரிகளாகி விட்டனர். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

(நிராகரிக்கும்) அடியார்களின் மீது பரிதாபமே! எந்தத் தூதர் அவர்களிடம் வந்தாலும் அவர்கள் அவரை ஏளனத்திற்கு ள்ளாக்கவே செய்கின்றனர்.

இந்த வழக்கப்படி அன்னாருக்கும் கடுமையான எதிர்ப்பு இருந்தது. அன்னாரின் ஜமாஅத்தை அழிப்பதற்கு முழு மூச்சாக முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அன்னாரின் எதிரிகள் அவர்களுக்கு எதிராகத் தீட்டிராத எந்தத் தீட்டமும் இல்லை. அன்னார் (அலை) எதிரிகளை முன்னிலைப் படுத்திக் கூறினார்கள்:

தலையிலிருந்து கால்வரை அந்த அன்பன் என்னுள் மறைந்துள்ளான்.

எனது தீமைவிரும்பிகளே! சிந்தித்து என் மீது தாக்குதல் தொடுங்கள்.

அன்னார் (அலை) அவர்களுக்கு எதிராக பெரும் பெரும் எதிரிகள், உதாரணத்துக்கு: முஹம்மத் ஹுஸைன் பட்டாலவி, சனாவுல்லாஹ் அம்ரித்ஸரீ, நஸீர் ஹுஸைன் தெஹ்லவி, பண்டிட் லேக்ராம், டாக்டர் டூயீ முதலியோர் எழுந்தனர். ஆனால், அனைவரும் தோல்வியைத் தழுவினர். அதற்குப் பிறகிலிருந்து இன்று வரை ஜமாஅத்துக்கு கடும் எதிர்ப்பு நிலவுகிறது. சில வேளை இந்த எதிர்ப்புகளின் சூறாவளியே கிளம்பிவிடுகிறது.

உதாரணத்துக்கு, 1934-இல் அஹ்ராரிகள் எழுந்தனர். அவர்கள் இந்த ஜமாஅத்தைத் தரைமட்டமாக்கி விடுவோம் என்றும் காதியானிலுள்ள மினாராவின் செங்கல்களைப் பெயர்த்தெடுத்து பியாஸ் நதியில் வீசிவிடுவோம் என்றும் அறிவித்தனர். 1974-இல் ஒரு அதிகாரி எழுந்தான். அவனும் ஜமாஅத்தின் மீது அளவுகடந்த அநீதியிழைத்தான்.

அல்லாஹ் அவர்கள் அனைவரையும் அடக்கிவிட்டான். அவர்களின் சூழ்ச்சிகள் அவர்களுக்கு எப்பயனையும் அளிக்கவில்லை. அவர்கள் இவ்வுலகிலிருந்து மிகவும் இழிவடைந்து விடைபெற்றனர். சிலர் தம் வீடுகளை இழந்தனர். ஆனால், ஜமாஅத்துக்கு அல்லாஹ் அல்லும்பகலும் மேன்மேலும் முன்னேற்றங்களைத் தந்தருளினான்.

*(தொடர்ச்சி 23-ஆம் பக்கம்...)*

# கிலாஃபத்திற்குக் கட்டுப்படுதலின் உண்மையான பொருளும் அதன் அருள்களும்

(மதிப்பிற்குரிய மவ்லவி அயாஸ் முஹம்மது கான் - UK)

தமிழாக்கம்: N. முபாரக் அஹ்மது

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ وَيَغْفِرْ لَكُمْ
ذُنُوْبَكُمْ ۗ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ . قُلْ اَطِيْعُوا اللّٰهَ وَالرَّسُوْلَ ۚ
فَاِنْ تَوَلَّوْا فَاِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْكٰفِرِيْنَ

## நேசம் மற்றும் கட்டுப்படுதல்

நேசம் என்றால் என்ன? நேசம் என்ற பண்புதான் நம்மை மனிதர்களாக நிலைநிறுத்துகிறது. மனிதன் ஒருவர் மீது நேசம் கொள்கின்றான் என்றால் அவரின் எல்லா வார்த்தைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றான். மேலும் அந்த நேசத்திற்குரியவரின் மகிழ்ச்சியைப் பெறுவதே அவனது வாழ்வின் நோக்கமாக அமைகின்றது. இதைப் போன்றே அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் விஷயத்தில் நேசம் மற்றும் கட்டுப்படுதலுக்கு ஓர் ஆழமான தொடர்பு உள்ளது.

இன்று இந்த அருளுக்குரிய மாநாட்டில், எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்பு எப்படிப்பட்டதென்றால் அது திரும்பத் திரும்ப பேசப்பட்ட, ஆனால் மறந்துவிடக் கூடாத ஒன்றாகும். இது முஸ்லிமாக நமது உள்ளத்தின் ஆழத்தில் உள்ளதாகும். இந்தத் தலைப்பு நமது ஆன்மீக மற்றும் பௌதீக முன்னேற்றத்தின் அடிப்படையாகும். என்னுடைய தலைப்பு என்னவென்றால், கிலா∴பத்திற்குக் கட்டுப்படுதலின் உண்மையான அர்த்தமும் அதன் அருள்களும் என்பதாகும்.

நான் உங்கள் முன் ஓதிய சூரா ஆல இம்ரான் அதிகாரம் 3 வசனம் 32-33 -ல் அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் மக்களிடம் இவ்வாறு கூறுமாறு கூறுகின்றான்.

நீர் கூறுவீராக: (மக்களே!) நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போது) அல்லாஹ்(வும்) உங்களை நேசிப்பான். உங்களுடைய பாவங்களை உங்களுக்காக மன்னிக்கவும் செய்வான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டபவனுமாவான்.

இதற்கு அடுத்த வசனத்தில் அல்லாஹ் நபி (ஸல்) அவர்களிடம் இவ்வாறு கூறுகின்றான். நீர் கூறுவீராக: நீங்கள் அல்லாஹ்வுக்கும் இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள். அவர்கள் (இதனை) புறக்கணித்துத் திரும்பி விட்டால், அல்லாஹ் நிராகரிப்பவர்களை ஒருபோதும் நேசிப்பதில்லை (என்பதனை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்). (3:32,33)

இதிலிருந்து தெள்ளத் தெளிவாகத் தெரிவது என்னவென்றால் எப்போது வரை நாம் தூதருக்குக் கட்டுப்படவில்லையோ அப்போது வரை நாம் இறைவனை உண்மையாக நேசிக்கின்றோம் என கூறவும் முடியாது. நமது வாழ்வின் நோக்கமான, இறைவனின் நேசத்தைப் பெறவும் முடியாது.

இறைவனே கலீ∴பாவை நேசிக்கின்றான் தேர்ந்தெடுக்கின்றான். எனவே கட்டுப்படுதல் அவசியமானதாகும்.

நபியின் மரணித்திற்குப் பிறகு அல்லாஹ் நுபுவ்வத்தின் பணியைத் தொடர்வதற்காக கிலா∴பத்தை நிறுவுகின்றான்.

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِى الْاَرْضِ

அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை அவர்களின் முன்னோர்களை கலீ∴பாக ஆக்கியது போன்று இப்பூமியல் கலீ∴பாக ஆக்குவதாக வாக்குறுதியளித்துள்ளான். (24:56)

எனவே, எப்போது அல்லாஹ்வே கலீ∴பாவை நியமிக்கின்றானோ எப்படி ஒருவர் அவன் தேர்ந்தெடுத்த ஒருவருக்குக் கட்டுப்படாமல் அவனது நேசத்தைப் பெற முடியும்? கிலா∴பத்தைப் பற்றிய இந்த வசனத்தை பின் தொடர்ந்து வரும் 4 வசனங்களில் அல்லாஹ் அவனது தூதருக்குக் கட்டுபடுவதன் அவசியத்தை ஒரு முறை அல்ல, இரண்டு முறை அல்ல, மூன்று முறை அல்ல மாறாக நான்கு முறை வலியுறுத்துகின்றான். மேலும் அவ்வாறு செய்வதால் கிலா∴பத்திற்குக் கட்டுப்படுவது நிச்சயமாக இறை தூதருக்குக் கட்டுபடுதைப் போன்றதாகும் எனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதன் சாராம்சம் இறைனுக்கே கட்டுப்படுவதாகும். அல்லாஹ் கூறுகின்றான்: எப்போது நம்பிக்கையாளர்கள்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதரால் அழைக்கபடுகின்றனரோ அப்போது இவ்வாறு கூறுவார்கள்.

سَمِعْنَا وَاَطَعْنَا நாங்கள் செவியேற்றோம்; நாங்கள் கட்டுப்பட்டோம்.

فَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ அவர்களே வெற்றிபெறுபவர்களாவர்.

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்.

وَاِنْ تُطِيْعُوْهُ تَهْتَدُوْا நீங்கள் அவருக்குக் கட்டுப்பட்டு நடந்தால் நேர்வழியினைப் பெறுவீர்கள்.

இவ்வாறு அல்லாஹ் இந்தக் கட்டுப்படுதல் நமது நன்மைக்கேயாகும், என வலியுறுத்துகின்றான். அதனால் நாம் நேர்வழி காட்டப்படுவோம், வெற்றி பெறுபவர்களாவோம் என கூறுகின்றான்.

ஹதீஸிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனக்கு பின்வரும் கலீ∴பாக்களுக்குக் கட்டுப்படுவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

عَلَيْكُمْ بِسُنَّتِيْ وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِيْنَ الْمَهْدِيِّيْنَ

உங்களுக்கு என்னுடைய சுன்னத்தைப் பின்பற்றுவதும் எனக்குப் பின்வரும் நேர்வழிகாட்டப்பட்ட கலீ∴பாக்களின் சுன்னத்தைப் பின்பற்றுவதும் அவசியமானதாகும்.




இன்னொரு ஹதீஸில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:

تَلْزَمُ جَمَاعَةَ الْمُسْلِمِينَ وَإِمَامَهُمْ

நீங்கள் முஸ்லிம்களின் சமுதாயத்தோடு அல்லது எந்த ஜமாஅத் இமாமோடு இருக்கின்றதோ அதில் இணைந்து கொள்ளுங்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இமாமின் கையில் பைஅத் செய்வதன் அவசியத்தை வலியுறுத்தியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்.

எப்போது நீங்கள் அவரை காண்பீர்களோ, நீங்கள் பனி மலையை முழங்காலில் தவழ்ந்து செல்ல நேர்ந்தாலும் அவரிடம் பைஅத் செய்யுங்கள், ஏனெனில் அவர் அல்லாஹ்வால் நேர்வழி காட்டப்பட்ட கலீஃபா ஆவார்.

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் அன்னாரது நேர்வழிகாட்டப்பட்ட கலீஃபாக்கள்

இங்கு இது தெளிவாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களிடத்தில் காலத்தின் இமாம் மற்றும் நேர்வழி காட்டப்பட்ட அந்த கிலாஃபத் அமைப்பிற்குக் கட்டுப்படுவதன் அவசியத்தை மிக விளக்கமாகவும் அழுத்த -மாகவும் எடுத்து வைத்துள்ளார்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

கட்டுப்படுதல் எப்படிப்பட்ட ஒரு வாழ்க்கைத் தரம் என்றால் நாம் அதை முழுமனதோடு செய்தால் அது உங்கள் உள்ளத்திற்கு ஆன்மீக ஒளியைத் தருகின்றது. மேலும் ஆன்மாவிற்குப் பிரகாசமளித்து இன்பத்தைத் தருகின்றது. கட்டுப்படுதல் எவ்வளவு தேவையோ அந்த அளவிற்கு ஆன்மீக பயிற்சிகள் தேவையில்லை. ஆனால் நிபந்தனை என்னவென்றால் இந்தக் கட்டுப்படுதல் கள்ளம் கபடமற்றதாக இருக்க வேண்டும். இது மிகப்பெரிய சவாலாகும். கட்டுப்படுதலுக்கு ஒருவர் தனது மன இச்சைகளை பலியிட வேண்டும். அதெல்லாமல் கட்டுப்படுதல் சாத்தியமில்லை. மனஇச்சைகள் தாம் இறைவனின் தவ்ஹீதை ஏற்றுக்கொண்ட பெரும் நம்பிக்கையாளர்களின் மனதில் கூட சிலைகளாக மாறும் வல்லமையுடையது.

இன்று உலகில் நேர்வழிகாட்டப்பட கிலாஃபத் என்னும் அமைப்பின் மூலம் ஒரு தலைமை கொண்ட ஒரு சமுதாயம் இருக்குமென்றால் அது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஆகும். கிலாஃபத்தின் உண்மை பாதுகாவலனாக அல்லாஹ்வே இருக்கின்றான் இருந்தபோதிலும் இந்த இறைவனின் அருளை நமக்கும் நமது வருங்கால சந்ததியினருக்கும் பேணிபாதுகாப்பதற்கான வழி என்ன வென்றால் நாம் அசைக்கமுடியாத மன உறுதியோடு காலத்தின் கலீஃபாவிற்கு முழுவதுமாகக் கட்டுப்படுவதாகும்.

ஹஸ்ரத் சௌதிரி ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் (ரலி) அவர்கள் உலகளாவிய நீதிமன்றத்தில் President ஆகவும், ஐநா சபையின் President ஆகவும் பணியாற்றியுள்ளார்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியும் ஆவார்கள் மற்றும் ஒரு அர்ப்பணிப்புள்ள அஹ்மதியும் ஆவார்கள்.

அவர்களிடம் உங்கள் வாழ்கையின் வெற்றிக்குக் காரணம் என்ன என்று கேட்கும்போது அவர்கள் உடனடியாக இவ்வாறு பதிலளிப்பார்கள், “ஏனென்றால் நான் என் வாழ்நாள் முழுவதும் கிலாஃபத்திற்குக் கட்டுப்பட்டவனாக இருந்தேன்.”

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் நாம் செய்த பைஅத் உடன்படிக்கை

அஹ்மதிகளாக நாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் உடன்படிக்கை செய்திருக்கின்றோம். பைஅத்தின் பத்தாவது நிபந்தனையில் நாம் உறுதி அளிக்கின்றோம். நாம் இறைவனுக்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கட்டுப்படுவோம். மேலும் மரணம் வரை அவர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம் என்றும், மேலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்காக உயர்ந்த அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவோம் என நாம் உறுதியளிக்கின்றோம். இந்த நிலை வேறு எந்த உலகியல் உறவு மற்றும் தொடர்பில் நாம் காணயியலாது. எனது அருமை சகோதர சகோதரிகளே, நாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் உறுதியளித்த அந்த அர்ப்பணிப்பு கிலாஃபத்துடனான உறவிலும் தனித்துவமாக இருக்க வேண்டும். இல்லையென்றால் நாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அளித்த வாக்குறுதியில் உண்மையாக இருக்க முடியாது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். கிலாஃபத் என்பதன் உண்மையான பொருள் எப்போது கலீஃபாவின் வாயிலிருந்து எந்த ஒரு வார்த்தை வந்து விட்டாலும் மற்ற அனைத்து திட்டங்கள், செயல் திட்டங்கள் கைவிட்டு விட வேண்டும். மேலும் ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும். எந்தத் திட்டம், செயல்திட்டம் காலத்தின் கலீஃபால் கட்டளையிடப்படுகிறதோ அதுவே நன்மை பயக்கும். எப்போது வரை இந்த உணர்வு நமது ஜமாஅத்தில் உருவாகவில்லையோ அப்போது வரை சொற்பொழிவுகள் உதவியற்றதாகும், செயல்திட்டங்கள் பயனற்றவையாகும். மேலும் ஒவ்வொரு திட்டமும் தோல்வியுறும்.

### ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் ஸஹாபாக்கள் காட்டிய கட்டுப்படுதல்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்த பிறகு எப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முதல் கலீ.்.பாவாக கிலா.்.பத்தின் அரியணையில் அமர்ந்தார்களோ அந்த நேரத்தில் அரேபிய தீபகற்பத்தில் கலகக்காரர்களின் எதிர்ப்பலை எழுந்தது. இந்த ஆபத்தான காலகட்டத்தில் ஸஹாபாக்கள் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களிடம் அழுத்தமாகப் பரிந்துரைத்தது என்னவென்றால் ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்களின் தலைமையில் சென்ற படையைத் திரும்ப அழைக்குமாறு கூறினார்கள். அப்போது தான் எதிரிகளின் அந்த உடனடியான பெரிய தாக்குதலில் இருந்து மதீனாவைப் பாதுகாக்க முடியும் என அறிவுரை கூறினார்கள்.

இதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆணித்தரமாக இவ்வாறு பதிலளித்தார்கள். எவ்வாறு நான் கலீ.்.பா ஆன பிறகு எனது முதல் கட்டளையே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தங்களது மரணத்திற்கு முன்னர் அனுப்பிய படையைத் திருப்பி பெறுவதாக இருக்க முடியும். அவர்கள் கட்டளையிட்டபடியே அந்தப் படை முன் செல்லும். மேலும் கூறினார்கள்: எதிரிகள் அனைவரும் மதீனாவில் ஒன்றாக கூடி நமது உடல்களைக் கிழித்தாலும் சரியே. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தயார் செய்த படையை நான் திரும்பி அழைக்க மாட்டேன்.



எல்லா ஸஹாபாக்களும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இந்த முடிவுக்கு முழுமனதாகக் கட்டுப்பட்டார்கள். ஒரு உலகவாதியின் பார்வையில் இந்த முடிவு ஞானமில்லாத ஒன்றாக இருக்கலாம். ஆனால் மறுபுறம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது உள்ள பேரன்பு மற்றும் கட்டுபதலினால் எடுத்த இந்த முடிவு இஸ்லாம் என்னும் கப்பலை எதிர்ப்பின் அலைகளிலிருந்து காப்பாற்றியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபாக்கள் முதல் கலீ.்.பாவிற்குக் கட்டுப்படுவதில் உயர்ந்த முன்மாதிரியைக் காட்டினார்கள். இவ்வாறு செய்ததன் மூலம் ஸஹாபாக்கள் வருங்கால சந்ததியினருக்கு கொடுத்த படிப்பினை என்னவென்றால் ஒற்றுமையில்தான் வலிமை இருக்கின்றது என்பதாகும். மேலும் அந்த ஒற்றுமை கிலா.்.பத்திற்குக் கட்டுபடுதல் எனும் நீருற்றிலிருந்து தான் வெளிப்படுகின்றது. உண்மை என்னவென்றால் கிலா.்.பத் என்னும் கேடயம் தான் நமது இருப்பை அச்சுறுத்தும் எல்லா பேராபத்துகளிலிருந்தும் நம்மைப் பாதுகாக்கின்றது. எவ்வளவு உண்மை இது! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்.

اَلْاِمَامُ جُنَّةٌ يُقَاتَلُ مِنْ وَّرَائِهٖ இமாம் என்பவர் கேடையம் ஆவார்

### ம.்.ரூப் என்பதன் உண்மையான அர்த்தம்

இது கலீ.்.பாவின் நல்ல கட்டளைகளுக்கு மட்டும்தான் கட்டுப்பட வேண்டும் என்ற தப்பெண்ணத்தை களைகின்றது. அவர்கள் எந்த கட்டளைக்குக் கட்டுப்பட வேண்டும்; எந்த கட்டளைக்குக் கட்டுபடக்கூடாது என்பதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என எண்ணுகின்றனர். நான் சற்று முன்னர் கூறிய எடுத்துக்காட்டில் ஸஹாபாக்கள் தங்களது ஆலோசனையில் ஆரம்பத்தில் உறுதியாக இருந்தாலும் எப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது முடிவைத் தெளிவாகக் கூறிவிட்டார்களோ, அப்போது எல்லா ஸஹாபாக்களும் தங்களது ஆலோசனைகளைக் கைவிட்டுவிட்டு கலீ.்.பாவின் முடிவிற்கு முழுமனதுடன் கட்டுப்பட்டார்கள். இதுதான் உண்மையான கட்டுப்படுதலாகும்.

ஹஸ்ரத் முதலாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அற்புதமாக விளக்குகின்றார்கள். திருக்குர்ஆனில் ம.்.ரூப் என்ற வார்த்தை நபி (ஸல்) அவர்களுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இப்போது யாராவது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த தவறையும் பட்டியல் இடுவார்களா? உண்மை என்னவென்றால், ம.்.ரூப்பான முடிவுகள் திருக்குர்ஆன்,சுன்னத், ஹதீஸைச் சார்ந்தே இருக்கின்றன. மேலும் இந்த காலக்கட்டத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வழிகாட்டிய எந்தவொரு கலீ.்.பாவும் இந்தப் பாதையிலிருந்து ஒருபோதும் விலகியிருக்கமாட்டார்.

உண்மை என்னவென்றால், எப்போது நாம் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபரிடம் பைஅத் செய்கின்றோமோ அவரின் எந்தவொரு கட்டளையையாவது கட்டுப்பட மறுக்க வேண்டும் என்ற கேள்விக்கே இடமில்லை. எவ்வாறு பணியாள் தனது தலைவரை ஆள முடியும? வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ம.்.ரூப் என்ற அரபி வார்த்தைக்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள். இறைவனால் நியமிக்கப்பட்ட நபர் கொடுக்கும் எல்லா கட்டளைகளும் பகுத்தறிவுமிக்கதாகவும் ஞானமிக்கதாகவும் இருக்கும். மேலும் நற்பண்புகளையும் நேர்மையையும் சார்ந்தே அவை இருக்கின்றன.

### மவ்லவி ஸாஹிப் பஹ்ராவைப்பற்றி இனி ஒருபோதும் எண்ணாதீர்கள்.

இன்றைய காலகட்டத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எப்படிப்பட்ட ஒரு ஜமாஅத்தை வழங்கியிருக்கின்றான் என்றால்

அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபாக்களிடம் இருந்த அதே துடிப்பைக் கொண்டுள்ளது. ஹஸ்ரத் மவ்லவி ஹக்கீம் நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களின் முன்னுதாரணம் தனித்துவமானது. ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். எவ்வாறு மூச்சுக்காற்றை இதயத்துடிப்பு பின்பற்றுமோ அவ்வாறு அவர் என்னைப் பின்பற்றுகிறார்.

ஒருமுறை ஹஸ்ரத் மவ்லவி ஸாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சந்தித்து சிறிது நாள் தங்குவதற்காக காதியானிற்கு வந்திருந்தார்கள். இவ்வாறு நிகழ்ந்தது. ஒருநாள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் மவ்லவி ஸாஹிபிடம் தங்களது ஆசையை இவ்வாறு வெளிப்படுத்தினார்கள். நீங்கள் காதியானில் நிரந்தரமாக தங்கிவிடுங்கள். பெஹ்ராவை உங்கள் வீடாக நீங்கள் எண்ணக்கூடாது. ஹஸ்ரத் மவ்லவி ஸாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள். அந்த நாள் முதல் பெஹ்ரா என்னுடைய வீடு என்ற எண்ணம் என்னுள் ஒருபோதும் வந்ததில்லை. எனவே கட்டுப்படுதல் என்பது செயல் அளவிலானது மட்டுமல்ல. கட்டுப்பதின் உண்மையான பொருள் நாம் நமது எண்ணங்கள், ஆசைகள் மற்றும் விருப்பத்தை காலத்தின் கலீ∴பாவிற்கு ஏற்ப அமைத்துக் கொள்ள வேண்டும். இது இல்லை என்றால் நாம் இறைநெருக்கத்தைப் பெற முடியாது.

### ஹஸ்ரத் மவ்லவி ஷேர் அலி ஸாஹிப் (ரலி)

உண்மையான கட்டுப்படுதல் என்பது வரையரைக்கு உட்பட்ட நமது புரியும்திறனை கலீ∴பாவிற்கு முன்னர் ஒன்றுமற்றதாகக் கருத வேண்டும். இவ்வாறு வருகின்றது ஹஸ்ரத் ஷேர் அலி ஸாஹிப் (ரலி) இவர்கள் மிகப்பெரும் அறிஞரும் வாக்களிக்கபட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபியும் ஆவார்கள். ஒரு மாணவர் அவர்களிடம் ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் சொற்பொழிவில் பயன்படுத்திய உருது சொற்றொடர் சம்பந்தமாக கேள்வி கேட்டார். அதற்கு அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள். எப்போது ஹஸ்ரத் ஸாஹிப் இந்த உருது சொற்றொடரை பயன்படுத்திவிட்டார்களோ இந்த சொற்றொடர் முன்னர் இல்லாவிட்டாலும் இப்போது அது அந்த மொழியில் மிகச் சரியான ஒரு சொற்றொடராக ஆகிவிட்டது. இதுதான் கிலா∴பத்திற்கு உண்மையான கட்டுப்படுதலாகும். கலீ∴பாவிற்கு முன்னால் பணிவுடன் தன்னை சமர்ப்பித்தலும் காலத்தின் கலீ∴பாவிற்கு ஏற்ப தனது புரிதலை மறு சீரமைப்பதும் ஆகும். இந்த மனப்பான்மை தான் தெய்வீக அறிவையும் புரிந்துணர்வையும் தருகின்றது.

### ஹஸ்ரத் மவ்லவி குலாம் ரஸூல் ராஜிக்கி (ரலி)

ஹஸ்ரத் மவ்லவி குலாம் ரஸூல் ராஜிக்கி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சிறந்த ஸஹாபி ஆவார்கள். மேலும் அவர்கள் உண்மையான கனவுகளையும் இறை செய்திகளையும் பெறும் நல்லடியாராகத் திகழ்ந்தார்கள்.

இவ்வாறு நடந்தது, ஒரு மவ்லவி ஸாஹிப் ரமலான் மாதத்தில் தங்களுடைய சொந்த விஷயத்திற்காக துஆ செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் கூறுகின்றார்கள் நான் துஆ செய்ய ஆரம்பித்து எட்டாவது நாளில் அல்லாஹ் தஆலா என்னிடம் உரையாடினான். என்னுடைய பேரன்பிற்குரிய இறைவன் என்னுடன் இறையறிவிப்பின் மூலமாக இவ்வாறு கூறினான். நீ உன்னுடைய குறிக்கோள் நிறைவேற வேண்டும் என்று நினைத்தால் நீ துஆ செய்வதுடன் கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களின் துஆவிற்காகவும் கண்டிப்பாக விண்ணப்பிக்க வேண்டும்.

சகோதர சகோதரிகளே! ஹஸ்ரத் குலாம் ரஸூல் ராஜிக்கி ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு இறங்கிய இந்த இறையறிவிப்பு வியப்பாக இருந்தாலும் ஆழ்ந்த அறிவைக் கொண்டுள்ளது. எட்டு நாட்கள் துஆ செய்த பின்னர், அல்லாஹ் அவர்களின் துஆவிற்குப் பதிலாக இறை அறிவிப்பை இறக்குகின்றான். அதில் உன்னுடைய துஆவை ஏற்றுக்கொண்டேன் என்று கூறவில்லை. மாறாக, ஹஸ்ரத் குலாம் ரஸூல் ராஜிக்கி ஸாஹிப் (ரலி) அவர்களிடம் மிகவும் பிரியத்துடன் காலத்தின் கலீ∴பாவிடம் துஆவிற்காக விண்ணப்பிக்குமாறு கூறுகின்றான். அப்போதுதான் எல்லா உலகங்களையும் படைத்த இறைவனின் அரியணையில் தங்களது துஆ ஏற்றுக்கொள்ளப்படும் என்று கூறுகின்றான்.

ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களின துஆவின் மூலமாக மட்டும்தான் நாம் நமது ஆன்மீக மற்றும் பௌதீக முன்னேற்றத்தை அடைய முடியும். இதை உணர்ந்தவாறு நாம் நமது அனைத்து ஆற்றல்களையும் கட்டுப்படுதல் என்னும் மரத்தில் இருக்கும் கிலா∴பத் என்னும் கிளையின் மூலமாக வெளிப்படுத்த வேண்டும். அது நமக்கு, இறைவனின் அருள் மற்றும் மகிழ்ச்சி என்ற இனிமையான கனிகளைத் தரும்.

ஹஸ்ரத் குலாம் ரஸூல் ராஜிக்கி ஸாஹிப் (ரலி) அவர்கள் அடிக்கடி கூறுவது என்னவென்றால், நான் ஒரு சாதாரணமான மனிதன் ஆவேன். எனக்குக் கிடைத்த என் வாழ்வில் நீங்கள் பார்க்கின்ற இந்த அருள்கள் எல்லாம்






இந்தப் போரில் சில நேரங்களில் ஒரு முஸ்லிம் போர் வீரர் 100 எதிரியை எதிர்க்க வேண்டியது வந்தது. ஆனாலும் முஸ்லிம்களை அழிக்க வந்த எதிரிகளை முஸ்லிம்களின் படை வென்றது. இவை அனைத்தும் காலத்தின் கலீ∴பாவிற்குக் கட்டுப்பட்டதினால் கிடைத்த அருள்களாகும்.

### இஸ்லாத்தின் தூதுச்செய்தியைப் பரப்புதல்

காலத்தின் கலீ∴பாவிற்குக் கட்டுப்படுதலின் முன்மாதிரிகள் நமது வரலாற்றில் முத்துக்களைப் போன்று சிதறிக் கிடக்கின்றன.

நான் இப்போது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஒரு புகழ்பெற்ற பிரச்சாரகர் மவ்லவி நாஸிர் அஹ்மது அலி ஸாஹிப் பற்றி குறிப்பிட விரும்புகின்றேன். ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அவரை மேற்கு ஆப்பிரிக்காவிற்கு அனுப்பினார்கள். அது கடற்பயணம் ஆகும். காதியானிலிருந்து ஸிராலியோன் செல்வதற்கு 3 மாதங்களுக்கு மேல் ஆகும். அது ஒரு நீண்ட மற்றும் கடினமான பயணமாகும். அந்தப் பயணத்தில் அவர்களுடன் அவரது மனைவி மற்றும் அந்த சமயத்தில் நோய்வாய்ப்பட்ட அவரது சிறு குழந்தையும் இருந்தனர். அந்தக் கப்பலில் ஏறுவதற்கு முன்னர் ஒவ்வொரு பயணியும் அவர் பயணத்திற்கு உடற்தகுதியோடு இருக்கின்றாரா என்று மருத்துவரால் பரிசோதிக்கப்படுவார். எப்போது மருத்துவர் அந்தச் சிறு குழந்தையைப் பரிசோதித்தாரோ அந்தக் குழந்தையின் உடல்நிலை மற்றும் உடல் வெப்பத்தைப் பார்த்து இவ்வாறு மவ்லவி நாஸிர் ஸாஹிபிடம் கூறினார். நான் இந்தக் குழந்தையை எடுத்துச் செல்ல முடியாது. இவன் மரணத்தின் விளிம்பில் இருக்கின்றான். எங்களது கப்பலில் குளிர்சாதன வசதியும் இல்லை. நீங்கள் இந்தக் குழந்தை மரணித்தால் இதைக் கடலில் எறிய சம்மதித்து கையெழுத்து இட்டால் மட்டுமே நான் இந்த கப்பலில் இவனை ஏற்ற முடியும் என கூறினார். இதைக்கேட்ட அந்த குழந்தையின் தாயார் தனது ஒரே குழந்கைக்காக அழுதவாறு நாம் இன்னொரு கப்பலில் பயணம் செய்யலாம் என தனது கணவரிடம் கூறினார். ஆனால் அந்த கிலா∴பத்தின் தொண்டர் எவ்வளவு மகத்துவமானவர், அவர் அந்தத் தாயை தேற்றியவாறு இவ்வாறு கூறினார், ஆமினாவே நீ கவலைப்படாதே அவனுக்கு ஒன்றும் ஆகாது. எனக்கு அடுத்த கப்பல் எப்போது வரும் என்று தெரியாது நான் பிரச்சாரகர் ஆவேன். அமீருல் மு∴மினீன் எனக்கு ஒரு பணியைத் தந்துள்ளார்கள். அந்தக் குழந்தையின் கையை பிடித்தவாறு கம்பீரமான குரலில் அந்த மருத்துவரிடம் நான் எங்கு கையெழுத்திட வேண்டும் என்று கேட்டார்கள். பிறகு கூறினார்கள்: இவன் இறந்துவிட்டால் இவனை கடலில் எறியுங்கள். ஆனால் இவனுக்கு ஒன்றும் ஆகாது. அந்த 11 வயது பையன் மவ்லானா முபாரக் அஹ்மது நாஸிர் அவர்கள் தமது 87 ஆம் வயது வரை ஜமாஅத்தின் பல்வேறு பொறுப்புகளில் நீண்ட காலமாக ஒரு சிறந்த பிரச்சாரகராகப் பணியாற்றினார்கள். நான் பலமுறை அவர்களிடமிருந்து இந்தச் சம்பவத்தை நேரடியாகக் கேட்டுள்ளேன்.

எனவே சகோதர சகோதரிகளே! நாம் ஒருபோதும் நமக்கு முன் சென்றவர்களின் தியாகங்களை மறந்துவிடக் கூடாது. நாம் இன்று அனுபவிக்கும் இன்பங்கள் அவர்களின்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மீதான நேசம் மற்றும் அர்ப்பணிப்பினால் கிடைத்தவை ஆகும். மேலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கலீ∴பாக்களுக்கு முழுமையாக கட்டுப்பட்டதனால் விளைந்தவையாகும்.

### ஹஸ்ரத் காலித் பின் வலீத் அல்லாஹ்வின் போர்வாள்

உண்மையில் கிலா∴பத்திற்குக் கட்டுபடுதல் தான் மகத்துவத்தையும் மரியாதையையும் தருகின்றது. அதை உலக பதவிகள் தருவதில்லை. கட்டுப்படுதல்தான் நம்பிக்கை கொண்டோர்களுக்கு எதிரிகளால் தகர்க்க முடியாத வலிமையைத் தருகின்றது.

வரலாற்றில் இவ்வாறு வருகின்றது. இரண்டாவது கலீ∴பாவான ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பின் அல் ஜர்ரா (ரலி) அவர்களை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு பதிலாகப் போர்ப்படை தளபதியாக நியமித்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் ஹஸ்ரத் காலித் அவர்கள் தங்களது பணியை நன்றாக செய்கிறார்கள். நான் உடனே அவர்களின் பதவியை ஏற்க வேண்டும் என எண்ணினார்கள். இவ்வாறு நிகழ்ந்தது, எப்போது ஹஸ்ரத் காலித் அவர்களுக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்தக் கட்டளை தெரிய வந்ததோ அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களிடம் வந்து இவ்வாறு கூறினார்கள். உங்களுக்கு கலீ∴பாவிடமிருந்து கட்டளை வந்துள்ளது. நீங்கள் அதை இன்னும் செயல்படுத்தாமல் இருக்கின்றீர்கள். நீங்கள் உடனடியாக படைத்தளபதியாகப் பொறுப்பேற்று கொள்ளுங்கள். மேலும் நீங்கள் எனக்கு மிகச்சிறிய வேலையை தந்தாலும் சரியே நான் எந்தவித தயக்கமும் இன்றி அதற்குக் கட்டுப்படுவேன்.

இதுவே ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் காலத்தின் கலீ∴பாவிடம் காட்டிய கட்டுப்படுதலின் உயர்ந்த தரம் ஆகும். அதுவும் போர் நடந்து கொண்டிருக்கும் அந்த சமயத்தில் அவர்கள் இதை செய்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களால் அல்லாஹ்வின் போர்வாள் என பெயரிடப்பட்டவர் காலத்தின் கலீ∴பாவிடம் அனைத்தையும் ஒப்படைப்பதிலேயே தமது வலிமையும் மகத்துவமும் இருக்கின்றது என்பதை அறிந்திருந்தார்கள். எனவே தான் கலீ∴பா அவர்களைப் பற்றிக் கொள்ள முடியும், பயன்படுத்த முடியும், அவர்களை வாளாக உபயோகப்படுத்த முடியம் என அறிந்திருந்தார்கள். வரலாறு நமக்கு கூறுவது என்னவென்றால்

தியாகங்கள் மற்றும் கடின உழைப்பினால் நமக்கு கிடைத்தது ஆகும். கிலா∴பத்திற்கு அவர்கள் காட்டிய முழுமையான கட்டுப்படுதல் அவர்களின் கடினமுயற்சியை வெற்றியாக்கியது மட்டுமல்ல அவர்களது குடும்பம் மற்றும் நேசத்திற்குரியவர்களைக் காப்பாற்றியது. இப்போது உங்களது நேரமாகும். நாம் இந்தத் தரத்தை அடையவில்லை என்றால் நாம் அல்லாஹ்வின் நேசம் மற்றும் மகிழ்ச்சியை மட்டும் இழப்பவர்களாக ஆக மாட்டோம். மாறாக, நமது முன்னோர்கள் மற்றும் அவர்களது தியாகங்களை அவமரியாதை செய்பவர்களாக ஆகி விடுவோம்.

### ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) கிலா∴பத்திற்காக தங்களது இறுதி விருப்பத்தை தியாகம் செய்தார்கள்

கணவன் மனைவி உறவு போன்று வேறு இல்லை. எப்போது இரண்டு உள்ளங்கள் தங்களது வாழ்வை ஒன்றாக வாழ்வதற்கு சேர்கின்றனவோ அங்கு அன்பும், அரவணைப்பும், நேர்மையும் இருக்குமோ பிறகு இருவரும் ஒருவரின் அங்கமாகி விடுகின்றனர். எப்போது அதில் ஒருவர் இவ்வுலகை விட்டு பிரிகின்றாரோ அப்போது இன்னொருவர் அவரது நல்ல விட அதிகமாக நேசித்த அந்த அன்பருக்கு அடுத்து தாம் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதாகும்.

ஆனால் எனது அருமை சகோதர சகோதரிகளே! ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களது தோட்டத்தில் உள்ள அனைத்து மலர்களும் அவர்களது அன்பினால் பிணைக்கப்பட்டிருந்தன. எப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) இரண்டாவது கலீ∴பா அவர்கள் தீவிரமாக தாக்கப்பட்டார்களோ அவர்களது மரணபடுக்கையில் அவர்களும் அவர்களது அன்பிற்குரிய நேசர்களுக்கு அருகில் தாம் அடக்கப்பட வேண்டும் என விருப்பம் தெரிவித்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு ஒரு தூதை அனுப்பினார்கள். நம்பிக்கைகுரியவர்களின் தாயான ஆயிஷாவிடம் செல்லுங்கள். உமர் இப்னு அல் கத்தாப் அவர்களது தோழர்களுடன் தன்னை அடக்கம் செய்வதற்கு தங்களிடம் அனுமதி கேட்கிறார் என்று கூறுங்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். நான் இந்த இடத்தை விரும்பினேன். ஆனால் இன்று என்னை விட எனது கலீ∴பாவிற்கு முக்கியத்துவம் தருகின்றேன்.




நினைவுகளிலேயே தனது எஞ்சிய வாழ்நாளை கழிப்பார். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களது கணவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விற்கு மிகவும் அன்பிற்குரியவர் ஆவார். கணவன் மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் அதிகமாக நேசித்தனர். எந்த நாளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்தார்களோ ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் வலியோடும் நேசத்தோடும் அந்த நாளை நினைவுகூர்ந்தவாறு கூறுகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ஆயிஷா (ரலி) அவர்களது அறையில் அவர்களது மடியில் தலைசாய்ந்திருந்தார்கள். அந்த அறையிலேயே மரணித்தார்கள். அவர்களது மறைவிற்குப் பிறகு அந்த அறையிலே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அந்த அறை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடையதாகும். சில வருடங்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அடுத்து அந்த அறையிலேயே அடக்கம் செய்யப்பட்டார்கள். அந்த அறையில் ஒருவரை மட்டும் அடக்குவதற்கான இடம் எஞ்சி இருந்தது. அந்த இடத்தை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தமக்காக முன்பதிவு செய்து வைத்திருந்தார்கள். அவர்களின் இறுதி விருப்பம் இந்த உலகில் எல்லோரையும்

இங்கு சிந்திக்க வேண்டிய இடமாகும். அந்த நேரத்தில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் எண்ண ஓட்டத்தை எவராலும் கற்பனை கூட செய்ய முடியாது. ஒருபுறம் அவர்களது அன்பிற்குரிய கணவரை நினைத்தவாறு அவர்களுக்கு அருகில் தனது விருப்படி அடக்கம் செய்ய வேண்டும் என எண்ணியருப்பார்கள். சற்று எண்ணிப்பாருங்கள் தங்களது கணவரோடு அவர்கள் வாழ்ந்த, தங்களது கணவர் மரணித்த, தங்களது கணவர் அடக்கம் செய்யப்பட்ட அந்த அறையில் அவர்கள் எப்படிப்பட்ட நெருக்கத்தை உணர்ந்திருப்பார்கள். ஆனால் அவர்களது கிலா∴பத்துடனான கட்டுப்படுதலின் தரம் ஈடு செய்ய முடியாததாகும். அவர்கள் தங்களது எல்லா உணர்வுகளையும் ஒருபுறம் வைத்துவிட்டு காலத்தின் கலீ∴பாவின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக தங்களது விருப்பத்தைத் தியாகம் செய்தார்கள். அது கலீ∴பாவின் விருப்பம் மட்டுமே கட்டளை அல்ல. ஆனால் அவர்கள் கலீ∴பாவின் விருப்பத்திற்கு மரியாதை செய்தார்கள். அந்த விருப்பத்தை மறுப்பதற்கு அவர்களுக்கு உரிமை இருந்தது. ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. ஏனென்றால் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிந்திருந்தார்கள். ஹஸ்ரத் அமீருல் மு∴மினீன்



விருப்பத்தை நிறைவேற்றுவதன் மூலமாகத் தான் இறைவனின் அன்பை பெற முடியும். அது மற்றநெல்லாவற்றையும் விட முக்கியமானது. அவர்களது உள்ளத்தில் அவர்கள் அறிந்திருப்பார்கள். காலத்தின் கலீஃபாவிற்குக் கட்டுப்படுவது அவர்களுக்கு அன்பிற்குரிய கணவரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நெருக்கத்தைப் பெற்றுத் தரும்.

இன்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் பெயர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயரோடு என்றும் நினைவு கூறப்படும். இரு பெயர்களும் பிரிக்க முடியாதவை ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள். ஆயிஷாவிடமிருந்து பாதி மார்க்கத்தைக் கற்றுக் கொள்ளுங்கள். இந்த மரியாதை மிக்க நம்பிக்கையாளர்களின் தாய் இறைவனுடனான அர்ப்பணிப்பு, நபி (ஸல்) அவர்கள் மீதான நேசம் மற்றும் கிலாஃபத்திற்குக் கட்டுப்படுதலில் மிக உன்னதமான எடுத்துக்காட்டை நிலைநாட்டியுள்ளார்கள். நாமும் அந்த அருளைப் பெற நாடினால், இந்த வழியே நாமும் பின்பற்ற வேண்டிய வழி ஆகும்.

சகோதர சகோதரிகளே! கிலாஃபத்துடனான நேசம், கட்டுப்படுதல் மற்றும் அர்ப்பணிப்பின் இந்த முன்மாதிரிகள் இஸ்லாத்தின் ஆரம்ப கால வரலாற்றை இரவின் வானில் ஒளிரும் நட்சத்திரங்களைப் போன்று மின்னச் செய்கின்றன. எனவே இந்தக் காலகட்டத்திலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நிறுவிய நேர்வழிகாட்டப்பட்ட ஜமாஅத்திலும் அந்த வரலாறு தொடர்கின்றது.

ஒவ்வொரு கிலாஃபத்தின் காலகட்டத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்திலுள்ள ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் காலத்தின் கலீஃபாவின் குரலிற்கு செவியேற்றவாறு இஸ்லாத்திற்கு சேவை செய்வதானாலும், மனித இனத்திற்கு தொண்டு செய்வதானாலும், பொருளாதார தியாகமானாலும் அல்லது வேறு என்னவாக இருந்தாலும் விரைந்தோடி வருகின்றனர். இப்போதும் இது மாறவில்லை. நாம் இப்போது ஐந்தாவது கிலாஃபத்தின் அருளுக்குரிய காலகட்டத்தில் இருக்கின்றோம். இன்று எந்த மனிதர் அவர்களிடம் நமது உள்ளமும் ஆன்மாவும் இருக்கின்றதோ அவர்கள் நமது கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் (அய்யதஹுல்லாஹ்...) ஆவார்கள். அவர்கள் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதற்கு மறுக்க முடியாத அல்லாஹ்வின் சாட்சியமே ஆகும். அவனே அவனது கலீஃபாவுடன் அவர்களது எல்லா செயல்களிலும் உதவி புரிகின்றான். அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறைவன் வழங்கிய அந்த முன்னறிவிப்பில் கூறப்பட்டுள்ள வாக்குறுதியை பெற்றவர்கள்.

اِنِّیْ مَعَكَ یَا مَسْرُوْرُ

மஸ்ரூரே நிச்சயமாக நாம் உம்முடன் இருக்கின்றோம்

இன்று அவர்களின் ஆன்மீக தலைமையில் முழு உலகிலும்,குக்கிராமம் முதல் தொலைதூர தேசங்கள் வரை, உலகில் புகழ் பெற்ற பெரும் பாராளுமன்றங்களிலும் உண்மை இஸ்லாம் எடுத்துரைக்கப்படுகின்றது. மேலும் ஜமாஅத் கடுமையான எதிர்ப்புகள் மற்றும் கொடுமைகளுக்கு மத்தியில் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக வளர்ந்து வருகின்றது.

அன்னாரது துஆவின் அற்புதத்திற்கு உலகெங்கும் வாழும் லட்சக்கணக்கான அஹ்மதிகள் தங்கள் அன்றாட வாழ்வில் சாட்சி பகிர்கின்றனர். எடுத்துக்காட்டுகள் எல்லையற்றவை. சில நேரங்களில் மருத்துவர்கள் குழந்தையின் உயிரை அச்சுறுத்தும் நிலையை கண்டறிகின்றனர். ஆனால் இந்த இறைவனின் மனிதரோ அந்தக் கலக்கமுற்ற பெற்றோர்களின் மனதை தமக்கே உரித்தான அமைதியான இனிமையான குரலில் நீங்கள் கவலைப்பட வேண்டாம், உங்கள் குழந்தைக்கு ஒன்றும் ஆகாது என்று தேற்றுவார்கள். அவர்களின் துஆக்கள் மூலமாக நோய்வாய்பட்டவர்கள் குணமடைவார்கள், பொருளாதார சிக்கலிலுள்ளவர்கள் செல்வ செழிப்பு அடைவார்கள். மற்றுஞ்சிலர் எல்லாவித எதிர்பார்பையையும் தாண்டி கல்வியில் குறிப்பிடத்தக்க சிறப்பைப் பெறுவார்கள். ஆனால் எல்லாவற்றையும் தாண்டி அன்னார் மூலமாக உலகின் மூலைகளில் உள்ள வெவ்வெறு நாடுகள், கலாச்சாரம், நிறம் மற்றும் மொழிகளைக் கொண்ட மக்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத்தில் இணைகின்றனர். மேலும் இஸ்லாத்தைப் பற்றிய ஆழமான புரிதலையும், அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான அளவுகடந்த நேசத்தையும், பெறுகின்றனர். கடுமையான எதிர்ப்பும் அடக்குமுறையும் இருந்தபோதும் இந்த அனைத்து மக்களும் கலீஃபாவின் கையில் ஒன்றிணைந்துள்ளனர். அதுவே நமது வலிமையாகும். எப்போது வரை நாம் கிலாஃபத்தின் அந்தக் கயிற்றை உறுதியாகப் பற்றி பிடித்து கொள்வோமோ மேலும் நாம் நம்மை முழுமையாக அர்ப்பணித்து கட்டுப்படுவோமா அப்போது வரை உலகின் எந்த சக்தியாலும் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. நாம் சிறிய ஜமாஅத்தாக இருந்தாலும் எவ்வாறு மற்றவர்கள் கனவு மட்டும் காணும் விஷயங்களை, சிறப்புவாய்ந்த சாதனைகளாக நாம் செய்கின்றோம் என்பதை எதிரிகள் புரியமுடியாமல் தவிக்கின்றார்கள்.

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

*(10-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

உண்மைத்தன்மை நீதிபதியைக் கவர்ந்தது. சரளமான வாதங்கள் எடுபடவில்லை. எனவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். அவர்கள் எல்லா வெற்றிக்கும் மேலாக உண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். வீரம் நிறைந்தவர்களாகவும், உண்மையாளராகவும், கடமை உணர்ச்சி மிகுந்தவர்களாகவும், ஆண்மையுள்ளவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

அமிர்தசரஸ் ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த பண்டிட் கரம் சிங் என்பவர் 1878 ஆம் ஆண்டு காதியானுக்கு வந்தார். அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுடன் விவாதம் நடத்த விரும்பினார். மறுபிறவிக் கொள்கையைப் பற்றியும், திருக்குர்ஆன், வேதங்கள் ஆகியவற்றின் போதனைகளைப் பற்றியும் விவாவிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இதன்படி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு கட்டுரை எழுதினார்கள். அந்தக் கட்டுரை தக்யா புட்டன் ஷா என்ற இடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு கூட்டத்தில் பொதுமக்கள் மத்தியில் படித்துக் காண்பிக்கப்பட்டது. அதில் மனித இனத்திற்கான முழுமையான வழிகாட்டி நூல் திருக்குர்ஆன் தான் எனவும் அது தன்னுடைய போதனைகளைக் காரண காரியங்களோடு விளக்குகிறது எனவும் தேவையான அனைத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது எனவும் அது தொடர்பான 17 அம்சங்களையும் எடுத்துக் கூறி இப்படிப்பட்ட அரிய போதனைகள் வேதங்களில் காணப்படவில்லை என்று ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வாதித்தார்கள்.

பண்டிட் அவற்றிற்குப் பதிலளிக்க முயற்சித்தார். ஆனால் அவரால் இயலவில்லை. எனவே கோபமடைந்தவராக அவர் வீடு திரும்பினார். அங்கு சென்றபின் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் தாம் தொடர்ந்து பத்திரிகை வாயிலாக விவாதிக்க விரும்புவதாகக் குறிப்பிட்டிருந்தார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அந்த வேண்டுகோளையும் உடனடியாக ஏற்றுக் கொண்டார்கள். அமிர்தசரஸிலிருந்து வெளிவந்த ஆரிய தர்பன் போன்ற ஏதாவதொரு பத்திரிகையின் வாயிலாக விவாதிக்கலாம் என்று கூறினார்கள். கிறிஸ்தவப் பிரசாரகரான ரஜப் அலீ, பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்த பண்டிட் சிவ நாராயண் ஆகியோரை நடுவர்களாக நியமிக்கலாம் என்றும் அவர்கள் ஆலோசனை கூறினார்கள். இதன் மூலம் அந்த விவாதம் மக்களின் கவனத்தைக் கவரக் கூடியதாகவும், சுவையானதாகவும், பயன்தரத்தக்கதாகவும், அதிகாரப் பூர்வமானதாகவும் அமையும் என்றும் அவர்கள் கூறினார்கள். தமது கட்டுரைகள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பண்டிட் காரக் சிங், பண்டிட் தயானந்த், பாவா நாராயண் சிங், முன்ஷி ஜீவன் தாஸ், முன்ஷி கஹினயாலால், முன்ஷி பக்தாவர் சிங், ஆரியதர்பன் பத்திரிகையின் ஆசிரியர், பாபு சாரதா பிரசாத், காதியானைச் சேர்ந்த முன்ஷி ஷரம்பத், முன்ஷி இந்த்ராமன் போன்றோருக்கும் அழைப்பு விடுத்தார்கள். ரூ. 500/– ரொக்கப் பரிசும் அறிவித்திருந்தார்கள். அந்தக் கட்டுரை அச்சில் 14 பக்கங்கள் வந்திருந்தது. தமது கருத்துக்களுக்கு ஆதரவாக ஆறு வாதங்களை எடுத்து வைத்திருந்தார்கள். அதில் இறைவனே இந்த அகிலம் முழுவதையும் படைத்தான்; மனித ஆன்மாக்கள் அவனைப் போல் என்றென்றும் நிலைத்து நிற்பவை அல்ல; அவை இறைவனால் படைக்கப்பட்டவை. எனவே மறுபிறவிக் கொள்கை தவறானது என்று நிரூபித்திருந்தார்கள்.

பின்னர் பண்டிட் கரக்சிங் ஆரிய சமாஜக் கொள்கைகளின் மீது முற்றிலும் அதிருப்தி அடைந்தார். சில காலம் கழித்து கிறித்தவத்தை ஏற்றுக் கொண்டார். ஆரிய சமாஜத்திற்கு எதிராகப் பல பிரசுரங்களை வெளியிட்டார். அதன் பின்னர் தம் வாழ்நாள் முழுவதும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை எதிர்க்கத் துணியவில்லை. ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த முன்னணி உறுப்பினரான இவர், உள்ளூர் ஆர்ய சமாஜிகளின் வேண்டுகோளை ஏற்று ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை எதிர்ப்பதற்காக காதியான வந்தார். வாதத்திற்குப் பிறகு தாம் சார்ந்திருக்கும் மதத்தின் கொள்கைகளால் வெறுப்படைந்தார். வெளிப்படையாக அந்தக் கொள்கைகளை உதறித் தள்ளினார். அவர் ஒரு முஸ்லிமாக மாறவில்லை என்பது உண்மைதான்; அந்த அளவுக்கு அவருக்குத் தைரியம் இல்லாமல் போயிருக்கலாம். ஆனால் அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களோடு மேற்கொண்ட விவாதத்திற்குப் பிறகு தாம் காதியானுக்கு வந்து வாதிட்ட ஆரிய சமாஜக் கொள்கைகளைத் தொடர்ந்து பின்பற்றி நடக்க முடியவில்லை என்பது மட்டும் உண்மை!

(தொடரும்....)

*(15-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இப்படிப்பட்ட எதிரிகளை நோக்கி இன்றிலிருந்து ஒன்றே கால் நூற்றாண்டுக்கு முன்னர் இவ்வாறு அறிவித்தார்கள்:

அறிவீனனே! உனது சூழ்ச்சிகளால் ஒருபோதும் இழிவில்லை எனக்கு!

இந்த உயிர் நெருப்பில் வீழ்ந்து அமைதி நிலவவிருக்கிறது!

உனக்கும் மார்க்கம் என்று ஒன்றிருந்தால் மாற்றிக் கொள் நான் கூறுகிறேன். எனக்கு கண்ணியமும் உனக்கு இழிவும் ஏற்படவிருக்கிறது!

ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் மூன்றாவது தலைவர் இந்த எதிரிகளை முன்னிலை படுத்திக் கூறுகிறார்கள்:


நம்மைசெயலிழக்கச் செய்வதற்கு முன்பைப் போன்றே உலகம் முழு ஆற்றலை செலுத்தும். ஆனால், அதனால் நம்மைசெயலிழக்கச் செய்ய முடியாது. ஹுஸூர் (ரஹி) கூறுகிறார்கள்: நான் உலகின் ஒவ்வொரு மினாராவில் ஏறி நின்றும் பறைசாற்ற ஆயத்தமாகவுள்ளேன்: உலகத்தின் அனைத்து அணுகுண்டுகளும் ஒன்று திரட்டப்பட்டாலும் இறைவனின் இந்தத் திட்டத்தை உலகத்தால் செயலிழக்கச் செய்ய முடியாது. எந்த சக்திகள் தற்பொழுது ஆணவத்தால் தலை தூக்கியுள்ளனவோ அல்லாஹ் தஆலா அவர்கள் அனைவரையும் அழித்து விடுவான். நாம் உலகின் நன்மைக்காக அவர்களின் உள்ளத்தை வென்று அவர்களை முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் ஒன்று திரட்டி விடுவோம். (அல் ஃபஸ்ல் அக்டோபர் 29, 1976)

(தொடரும்....)

(22 -ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)

எனவே இன்று எனதருமை சகோதர சகோதரிகளே! நமக்கு கிலா∴பத் என்னும் வடிவில் வழங்கியுள்ள இந்த மகத்தான அருளுக்காக நாம் நன்றி செலுத்துவோம். இறைவனின் இந்த அருளை நாம் ஒருபோதும் அசாதரணமாக எண்ணக்கூடாது. உலகில் நமது ஜமாஅத்திற்கு மட்டுமே அல்லாஹ்வின் இந்த அருள் கிடைக்கப்பெற்றுள்ளது. நாம் இந்த அருளை நமது உயிரைக் கொண்டு பாதுகாக்க வேண்டும். நாம் இன்று நடக்க இருக்கின்ற உலகளாவிய பைஅத்தில் நமது பைஅத்தை புதுப்பிக்க இருக்கின்றோம். நாம் நமது இறுதி மூச்சு வரை முழு உள்ளத்தோடும் எல்லையற்ற அர்ப்பணிப்போடும் நமது கலீ∴பாவோடு இருப்போம் என்று மீண்டும் ஒருமுறை உறுதிமொழி கூறுவோம். எனவே நமது நற்செயல்கள் மற்றும் கட்டுப்படுதலின் விளைவாக அல்லாஹ் தொடர்ச்சியாக இந்த மகத்துவமிக்க கிலா∴பத்தின் அருளைத் தருவான். ஒருபோதும் கிலா∴பத்திற்கு நாம் கட்டுப்படுவதை கிலாபத்திற்குப் பயன் தரும் உதவி என நினைக்காதீர்கள். கலீ∴பா தான் நம்மீது விரிக்கப்பட்டிருக்கும் சதி வலைகளிலிருந்து நம்மைக் காப்பாறுகின்றார். கலீ∴பா அல்லாஹ்வின் ஒளியில் பார்க்கின்றார், அவரது கையில் ஒளிவிளக்கு இருக்கின்றது. நாம் அவரைப் பின்பற்றினால் இருட்டில் மறைந்திருக்கும் பெரும்பசியுள்ள மிருகத்தின் தாக்குதலிருந்து பாதுகாப்பு பெறுவோம். நாம் நமது இலக்கைப் பாதுகாப்பாக அடைவோம். ஆனால் அவர் நமக்கு வழிகாட்டுகின்ற வழியிலிந்து பாதை தவறிவிடுவோம் என்றால் பிறகு நாம் இழப்பிற்குள்ளாவோம்.

சகோதர சகோதரிகளே, நாம் நமது குழந்தைகளுக்கு நமது முன்மாதிரியைக் காட்ட வேண்டும். இன்று அஹ்மதிகளாகிய நமது வாழ்வில் நமது கையில் ஒரு மதிப்புமிக்க சொத்து ஒன்று இருக்கின்றதென்றால் அது கிலா∴பத்தின் இந்த அருளுக்குரிய அமைப்பாகும். நாம் இதைச் செய்தால் நாம் இந்த உலகை விட்டுப் பிரிந்து நெடுங்காலத்திற்கு பிறகும்நமது குழந்தைகள் அவர்களின் குழந்தைகள் மேலும் அவர்களின் குழந்தைகள் அவர்களுக்கு பின் வருபவர்கள் என அவர்களெல்லாரும் அல்லாஹ்வால் வழிகாட்டப்பட்ட அந்த வழிகாட்டியின் கைகளில் பாதுகாப்பாக இருப்பார்கள். மேலும் நாம் அவர்களைப் பிரியும் போது நேர்மையுடன் நெஞ்சத்தில் கைவைத்தவாறு சொல்ல முடியும் அதாவது நாங்கள் எங்களது இருப்பின் ஒவ்வொரு பகுதியையும் கிலா∴பத்தின் இந்த அமைப்பைப் பாதுகாப்பதற்காகக் கொடுத்தோம். இப்போது நாங்கள் அதை உங்கள் கையில் கொடுக்கின்றோம். எனதருமை குழந்தைகளே எந்த மண்ணில் நாங்கள் புதைந்து இருக்கின்றோமோ நீங்களும் எங்களைப் போன்றே கிலா∴பத் என்னும் இந்த பொக்கிஷத்தைப் பாதுக்கின்றீர்களா என அது கேள்வி கேட்கும்.




“ மதம் மற்றும் மதச்சார்பற்ற உண்மைகளுக்கு இடையில் தனியே பிரித்துக் கோடிடாமல், உண்மையை அடைவதில் பகுத்தறிவின் பங்கைத் திருக்குர்ஆன் வெளிப்படையாகவே ஆதரிக்கின்றது. உண்மை என்பது இஸ்லாமிய மார்க்கம் ஆகும். இஸ்லாம் என்பது உண்மையான மார்க்கமாகும். உண்மை தனது தூதுச் செய்தியைப் பரப்புவதற்கு எவ்வித பலவந்தமும் தேவைப்படுவதில்லை. அதற்குத் தேவைப்படும் ஒரே ஆயுதம் பகுத்தறிவு மட்டும்தான். அவ்வாறே மனித இயல்பு, வரலாறு மற்றும் பகுத்தறிவின் அடிப்படையிலேயே திருக்குர்ஆனின் போதனைகளை ஆய்வு செய்யுமாறு இஸ்லாம் மனித சிந்தனைகளைத் தூண்டுகிறது.

*(Hazrat Mirza Tahir Ahmad, Khalifatul Masih IV^th, Revelation, Rationality, Knowledge and Truth p.256)*

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M. Muhammad Sultan Muhiyudeen | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam